PUBLIC LIBRARY

ISSN 1391-9504

Vijey விஜய்


# விஜய்


11.09.2013 - மலர் 10, இதழ் 28




## ஐ. நா. சபையின் அமைப்புகள் சில...

## பறவைகள் உலகின் பெரியன






உலகிலேயே மிகவும் தட்டையான கைக்கடிகாரம்



மாயாஜால பென்சில்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜோன் டொயில் அவர்களின் நாட்குறிப்பு

பிரதானிகளும் பிரபுக்களும் ஆங்கிலேயருடனான தமது ரகசியப் பேச்சுவார்த்தைகளை நிறுத்தினர். இதனை அறிந்துகொண்ட மன்னர் ஆங்கிலேயர் மீது பெரும்பகைமை கொண்டார். இதற்கிடையில், ஆங்கில சிவில் அதிகாரியாகவும் கொழும்பு வருமான அதிகாரியாகவும் திகழ்ந்த ஜோன் டொயில் அவர்கள் கண்டிக்கு எதிராக மிக ரகசியமாக உளவறிவதில் தனது காலத்தைக் கழித்தார். கண்டி மன்னனுக்கு எதிராகச் செயற்பட்ட பிரதானிகளுடன் அவர் நெருக்கமான உறவைப் பேணிவந்தார். கடிதத்தொடர்புகளைக் கூடத் தொடர்ந்தார். அத்துடன், நாள்தோறும் அவருக்குக் கிடைக்கும் தகவல்களை குறித்துக்கொள்ளும் தினக்குறிப்புப் புத்தகம் ஒன்றும் அவரிடம் இருந்தது.

டொயில் தனது நாட்குறிப்புப் புத்தகத்தில் கிராமவாசிகள், கரையோர மற்றும் மலையகக் கிராமத் தலைவர்கள், பிரபுக்கள், பிரதானிகள் பௌத்த பிக்குகள் மற்றும் இஸ்லாமியர்களால் வழங்கப்படும் தகவல்களையும் உளவு மற்றும் சூட்சுமங்களையும் எழுதி வைத்தார். கண்டி ராச்சியத்தின் இறுதிக்காலம் குறித்து பல்வேறு விடயங்களை நேரடியாக அவதானித்து எழுதிய குறிப்புகளாக இது இருப்பதால், வரலாற்று ஆசிரியர்கள் குறித்த காலத்துத் தகவல்களையும் அறிக்கைகளையும் ஒப்புநோக்க இந்நாட்குறிப்பு நூல் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.


பிலிமத்தலாவையைப் பதவியிலிருந்து நீக்கி, முதலாவது கண்டி பிரதானிப் பதவி சப்ரகமுவ திசாவனிக்கு வழங்கப்பட்டது. அவரும் மன்னனை நீக்கி அரச பதவியைத் தான் பெற்றுக்கொள்ள முயற்சித்த ஒருவர்தான். ஆனால், அது நிறைவேறவில்லை. அவர் எஹெலப்பொலை, பிலிமத்தலாவையின் வம்சத்தைச் சார்ந்தவர். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் அவரை விரும்பவில்லை. எனினும், பிரதானிகள் மற்றும் பிரபுக்களில் பெரும்பாலானோர் எஹெலப்பொலையின் ஆதரவாளர்களாக இருந்தனர். அத்தோடு , பிலிமத்தலாவைக்கு அடுத்து மலையக ராச்சியத்தின் சிரேஷ்ட பிரபுவாகவும் பிரதானியாகவும் அவர் திகழ்ந்தார். அதனால், முதல் பிரதானிப் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# மாயாஜாலப் பென்சில்

மாயாஜாலப் பென்சில் என்பது மிகவும் எளிமையானதும் பிரபல்யமானதுமான ஒரு மாயாஜால வித்தையாகும். இந்த மாயாஜால வித்தையின்மூலம் பென்சில் ஒன்றை அந்தரத்தில் மிதக்க விட முடியும்.








**தேவையான பொருட்கள்:** இரண்டு பென்சில்கள், கைக்கடிகாரம்.

இதன்போது, நீங்கள் நன்கு அனுபவம் பெற்ற மாயாஜால வித்தைக்காரரின் பாணியையும் அணுகுமுறைகளையும் பின்பற்றுவீர்களாயின், பார்வையாளர்கள் உங்களது மாயாஜால திறமையைக் கண்டு வியப்படைவர்.

**மாயாஜால வித்தை:** இங்கு மாயாஜால வித்தை காண்பிக்கும்போது, நீங்கள் இடது கையை வலது கையால் பிடித்திருக்க வேண்டும். இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அது அமைய வேண்டும்.


மறைக்கப்போகும் பென்சிலானது, இடது உள்ளங்கை வரை நீண்டிருக்க வேண்டும். உங்களது மர்மமான உதவியாளராக வலது கையின் ஆட்காட்டி விரலே செயற்படுகின்றது. இந்த மாயாஜால வித்தையானது, முழுவதும் ஆட்காட்டி விரலிலேயே தங்கியுள்ளது. இதன்போது, முன்கூட்டியே நீங்கள் கைக்கடிகாரத்தை அணிந்திருக்க வேண்டும். அப்போதுதான் பார்வையாளர்களுக்கு உங்களில் சந்தேகம் ஏற்படாது.




**செயற்படுத்தும் வழிமுறைகள்:**

1. முதலில் கைக்கடிகாரப் பட்டியினுள் பென்சிலொன்றைச் செருகி வைத்துக்கொள்ளுங்கள்.
2. அந்தக் கையை மெதுவாக மேசையில் வையுங்கள்.
3. மேசையின் மீது வைக்கப்படும் இரண்டாவது பென்சிலை, இடது கையில் மறைத்து வைத்துள்ள பென்சிலுக்குள் செருகி, உள்ளங்கைக்குள் நுழைத்துக்கொள்ளுங்கள்.
4. இப்போது அந்தக் கையை மற்றைய கையால் பிடித்து மெதுவாக மேலே உயர்த்துங்கள். இப்பொழுது உங்களது கைகளின் மாயாஜாலம் காரணமாக,பென்சில் அந்தரத்தில் மிதக்கும்.
5. பின்னர் மெதுவாக வலது கையை அகற்றுங்கள். அப்பொழுதும் பென்சில் மர்மமான முறையில் மிதப்பதுபோன்றே தோன்றும்.
6. இறுதிக் கட்டத்தில் கைகளைக் கீழே தாழ்த்தி விரலின் உதவியுடன் இரண்டாவது பென்சிலை முதலாவது பென்சிலிலிருந்து விடுவித்து மேசையில் வையுங்கள். சிலநேரப் பயிற்சிகளின் பின்பு இந்த வித்தையைச் சிறந்த முறையில் செய்து காட்ட முடியும்.




# 100 மில்லியன் வருடங்கள் பழமையான முதலை


தன்சானியாவில் அகழ்வாராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்த பிரான்ஸிய விஞ்ஞானிகள் குழுவினர், அண்மையில் விசித்திரமான ஒரு பிராணியின் தலைப்பகுதிக்குரிய எச்சங்களைக் கண்டுபிடித்திருந்தனர். பார்வைக்கு இந்த பிராணி முதலையைப் போன்றுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், இன்று நாம் காணக்கூடிய முதலையைப் போன்ற தோற்றம் இதற்கு இல்லை.





உணவுகளை நன்கு கடித்து-மென்று உட்கொள்ளும் பிராணியாகவே இது அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள முதலைகளோ, உணவுகளைக் கடித்து உண்பதில்லை. மாறாக, அப்படியே விழுங்கிவிடுகின்றன. தோற்றத்தால் ஊர்ந்து செல்லும் ஒரு பிராணி போன்று இது இருந்தாலும் இந்த வியப்பான பிராணியிடம் பாலூட்டிகளின் இயல்புகளையும் காணக்கூடியவாறு இருப்பதாக விஞ்ஞானிகள் குழு தெரிவிக்கின்றது.

100 மில்லியன் வருடங்கள் பழமைவாய்ந்த இந்தப் பிராணி, உடல் அளவில் பூனையைப் போன்றது. அத்துடன், இது பெரும்பாலான நேரங்களைத் தரைப்பகுதியிலேயே கழித்துள்ளது. தோற்றத்தில் முதலையைப் போன்று இருந்தாலும் இந்தப் பிராணி உண்மையில் எந்த வகையைச் சேர்ந்தது என்று விஞ்ஞானிகளால் உறுதிபடத் தெரிவிக்க முடியாதுள்ளது.




இதற்கு 'பாக்காசுச்சுஸ் கப்பலிமாய்' என்று பெயரிட்டுள்ளனர். தன்சானியாவின் ஸ்வாஹிலி பழங்குடியினரின் மொழியில் 'பாக்கா' என்பது பூனையாகும். 'சுச்சுஸ்' எனும் கிரேக்க மொழிச் சொல்லின் அர்த்தம் 'முதலை' என்பதாகும். இதனுடன் இணைந்து வரும் 'கப்பிலிமாய்' என்பது தன்சானியாவின் பிரபல்யம் பெற்ற எச்சவியல் விஞ்ஞானி [illegible] கப்பிலிமாயை கௌரவிக்கும் முகமாக சூட்டப்பட்டதாகும்.

இந்தப் பிராணியின் முள்ளந்தண்டுப் பகுதி நெகிழ்வுத்தன்மை கொண்டது. உடல் முழுவதும் செதில்கள் உள்ளன. இதனால்தான் இந்த பிராணியின் தோற்றம் முதலையைப் போன்று இருக்கின்றதாகக் கூறப்படுகின்றது. இவை எல்லாவற்றையும்விட இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அதாவது, இந்தப் பிராணி இரையைக் கடித்து அசைபோட்டு உண்ணும் வழக்கமுடையது என்று இது தொடர்பான ஆய்வின்போது தெரியவந்துள்ளது. ஏனெனில், இதற்கு கடைவாய்ப் பற்கள் இருந்துள்ளன. அவற்றின்மூலம் இவை தமது உணவை நன்கு அரைத்து உட்கொண்டுள்ளன. இந்த வகையான பற்கள் இருப்பது பாலூட்டிகளின் பொது இயல்பாகும்.அத்துடன், உணவைக் கிழித்து உண்ணுவதற்கு ஏற்றவகையில் இவற்றுக்கு வேட்டைப் பற்களும் இருந்துள்ளன.

-அஷ்விதா




THE COLUMBUS DISPATCH

## நிஜம் மாறிய படம்



பார ஊர்தியினால் தூக்கப்படும் பொருளை இந்த நபர் மிக இலகுவாகப் பிடித்துள்ளாரோ! அதுதான் இல்லை. வீதி மின்சமிக்ஞையை திருத்தும் வேலையை செய்கையில் இயல்பாக இது அமைந்துவிட்டது. உற்றுப் பாருங்கள். இது வெறும் மாயை என்பது புலப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முட்டாளின் கனவு

முன்னொரு காலத்தில் ஒரு சோம்பேறி மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் சோம்பேறி மட்டுமல்ல; முட்டாளும்கூட. ஒருநாள் ஒரு சாக்குப் பையையும், ஒரு தடியையும் எடுத்துக்கொண்டு அதிர்ஷ்ட தேவதையைத் தேடிப் புறப்பட்டான். வழியில் ஒரு ஓநாயைக் கண்டான். "எங்கே போகிறாய்" என்று கேட்டது ஓநாய்.

"அதிர்ஷ்ட தேவதையிடம், எனக்கு செல்வமும், மகிழ்ச்சியும் வேண்டுமென்று செல்கிறேன்" என்றான். "எனக்கு ஓர் உதவி செய்வாயா? நான் பிறந்ததிலிருந்தே எலும்பும், தோலுமாகவே இருக்கிறேன். என் உடம்பில் உரோமம் ஏன் வளரவில்லை? அதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டு வருகிறாயா?" என்றது ஓநாய். "சரி" என்றவாறு சிறிது தூரம் சென்றதும் ஒரு திராட்சைத் தோட்டம் வந்தது. அந்தக் கொடிகளில் ஒரு பச்சை இலைகூட இல்லை. எல்லாம் பழுப்பேறி இருந்தன. அந்த செடியும் அவனை, "எங்கே செல்கிறாய்?" என்று கேட்டது.

"அதிர்ஷ்ட தேவதையிடம், வேலை செய்யாமல் நான் பணக்காரனாகவும், செல்வாக்கு உள்ளவனாகவும் இருக்க, வரம் பெறப் போகிறேன்" என்றான். அந்தச் சோம்பேறி.

"அப்படியானால், என் பழுத்த இலைகள் பச்சை இலைகளாக மாற, நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டுக்கொண்டு வா!" என்றது திராட்சைச் செடி.

"ஆகட்டும்" என்று கூறிவிட்டு இன்னும் சிறிது தூரம் சென்றதும், ஓர் ஆறு வந்தது. அதைத் தாண்டும்போது, நீருக்கு மேல் வந்தது ஒரு மீன். அதன் முதுகில் பெரிய கட்டி ஒன்று இருந்தது. அதனிடமும், "தான் அதிர்ஷ்ட தேவதையைப் பார்க்கப் போவதாகக் கூறி பெருமை அடித்துக் கொண்டான்" அந்த சோம்பேறி.

"இதோ பார்த்தாயா இந்த கட்டியை... இது பெரிதாகிக்கொண்டே வருகிறது. அதிர்ஷ்ட தேவதையிடம் இதற்குப் பரிகாரம் கேட்டு வருகிறாயா?" என்றது மீன். அவனும் ஒத்துக்கொண்டான். இன்னும் சிறிது தூரம் சென்றதும் ஓர் அழகிய சிற்றோடை தென்பட்டது. அங்கே வெள்ளை நிற ஆடையும், புதிதாகப் பூத்த மலா் கிரீடமும் கொண்ட அழகிய பெண்ணொருத்தி அவனிடம், "நீ யார்? எதற்கு இங்கு வந்தாய்? வழியில் யாரைச் சந்தித்தாய்?" என்று கேட்டாள்.

"ஓநாய்க்கு உரோமம் வளர வேண்டுமாம்" என்றான்.

"முழுச் சோம்பேறியும், முட்டாளுமான ஒருவன் இதயத்தை உண்டால் அதன் குறை நீங்கும்"

"திராட்சைக்கு அதன் இலைகள் துளிராக இருக்கும்போதே பழுத்து உதிர்ந்துவிடுகின்றனவாம்!"

"அந்தத் திராட்சைச் செடியின் அடியில் உள்ள பொற்காசுகளைத் தோண்டி எடுத்துவிட்டால், திராட்சை கொடிகள் செழிப்பாக வளரும்" என்றாள்.

"மீனின் கட்டிக்கு?" என்றான் சோம்பேறி.

"அந்தக் கட்டி முழுவதும் உள்ள உயரிய வைரங்களை எடுத்துவிட்டால் சரியாகிவிடும். நீ வந்த வழியே போ! அதிர்ஷ்டம் உன் கையில்!" என தேவதை கூறி மறைந்தது. சோம்பேறியும் சந்தோஷமாக அங்கிருந்து சென்றான். முதலாவதாக மீனிடம், தேவதை கூறியதைக் கூறினான்.

"நீயே அந்தக் கட்டியை அறுத்து வைரங்களையெல்லாம் எடுத்துச் செல்!" என வேண்டியது.

"எனக்கு அதற்கெல்லாம் நேரமே இல்லை. அதிர்ஷ்டம் எனக்காகக் காத்திருக்கிறது" என வேகமாக திராட்சைத் தோட்டத்தை அடைந்து தேவதை சொன்னதைச் சொன்னான். "நீயே அந்தப் புதையலை வெட்டி எடுத்துச் செல்!" என மன்றாடியது திராட்சைச் செடி.

"அதெல்லாம் முடியாது. எனக்கு நேரமில்லை" என வேகமாகச் சென்றான் முட்டள். ஓநாய் எதிர்ப்பட்டது. ஓநாயிடம் தேவதை கூறியதை சொன்ன அவன் மிகப் பெருமையாக, தான் எப்படி மீனையும், திராட்சைத் தோட்டத்தையும் உதறிவிட்டு வந்தேன் என்று கூறி பெருமைப்பட்டுக் கொண்டான்.

"முட்டாளே! புதையலைத் தோண்டியிருந்தால் நீ செல்வந்தனாகியிருப்பாய். மீனின் கட்டியை அறுத்திருந்தால், எவ்வளவோ வைரங்கள் உனக்கு கிடைத்திருக்கும். எனவே, உன்னைப்போன்ற முட்டாள் சோம்பேறிகளுக்கு, இந்த உலகில் இடமில்லை. உழைப்பின்றி எதுவும் கிடையாது. நீதான் அந்த தேவதை கூறிய சோம்பேறி முட்டாள்" என்று கூறிக்கொண்டே, அவனைக் கொன்று தின்றது ஓநாய்.

# அபூர்வ சிறுவர்கள்






## அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....

பன்-பாலா

இதுவரை...

இராமபுத்திரனின் சூழ்ச்சி பலிக்கவில்லை. விமானம் வெடித்துச் சிதறிவிட்டது. சிறுவர்களை கப்பலில் இருந்த கடற்கொள்ளையர்கள் காப்பாற்றி கப்பலில் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் மாலுமிகளிடம் சேர்த்தனர்.

இனி...

மாலுமிகளுக்கு மத்தியில் சிவில் உடை அணிந்தவாறு அமர்ந்திருந்த வெள்ளைக்காரர் இவர்களின் உரையாடல்களை அவதானித்தவராய் தலைமை மாலுமியிடம் விபரம் கேட்டார். தலைமை மாலுமி சிறுவர்கள் கூறியதை அவரிடம் கூறினார். அதைக் கேட்டதும் அந்த வெள்ளைக்காரரின் முகம் ஆச்சரியத்தால் மாறியது. அவர் மூன்று சிறுவர்களையும் பெருமிதத்துடன் பார்த்தார். அருகே வரச் செய்து கைகளைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்துச் சொன்னார். தலைமை மாலுமியும் வெள்ளைக்காரரும் சிறுவர்களின் சாதுர்யங்களைப் புகழ்ந்து பேசிக் கொண்டார்கள்.

"இவர் யார்" என்று வெள்ளைக்காரரைக் காட்டிக் கேட்டான் அஷ்வின்.

அதைப் புரிந்துகொண்ட வெள்ளைக்காரர் ஆங்கிலத்திலேயே, "நான் அமெரிக்கன்! பெயர் வோர்னர் ரோஜர். முன்னாள் பொலிஸ் அதிகாரி" என்றார்.

"இவருடைய மகன் காணாமல் போய்விட்டார். அவரைத் தேடிக்கொண்டு நாடு நாடாக சுற்றிக் கொண்டிருக்கிறார். பாவம்!" என்றார் தலைமை மாலுமி.

பிரியன் குறுக்கிட்டு "அமெரிக்கரா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றார் தலைமை மாலுமி.

மூவருக்கும் ரோஜர் ஞாபகத்திற்கு வந்தான். அவனது அப்பாவும் அமெரிக்காவில் பெரிய பொலிஸ் அதிகாரி என்றுதானே அவனும் கூறினான். தன் சந்தேகத்தை வெளியிட்டான் பிரியன். ரோஜருக்கு நடந்த கொடுமையையும் கூறினான். இவற்றைக்கேட்ட தலைமை மாலுமி வெள்ளைக்காரருக்கு அதனைக் கூறினார்.

"ஓ!" என்று தலையைப் பிடித்துக் கொண்டார் வோர்னர் ரோஜர்.

அந்த இடத்தில் ஒரு திடீர் சோகம் சூழ்ந்து கொண்டது. இழப்பு, அச்சம், பயம், நிச்சயமின்மை, அடுத்து நடக்கப் போவதன் மர்மம் என எல்லோரது மனங்களிலும் குழப்பமே குடிபுகுந்திருந்தது.

சிறுவர்களைப் பரிதாபமாகப் பார்த்தார் தலைமை மாலுமி.

"என்ன அங்கிள்....?" என்றான் சுதன்.

"நீங்கள் மூவரும் அந்த விஞ்ஞானிகளையே தோற்கடித்துள்ளீர்கள். ஆனால், எங்களுக்கு இந்த கடற்கொள்ளையரிடம் இருந்து எவ்வாறு தப்புவது என்று தெரியவில்லை" என்று குரல் கம்மச் சொன்னார் தலைமை மாலுமி.

சிறுவர்கள் மூவரும் தனித்தனியே யோசித்து, பின் கலந்து பேசினர். மூவரும் தமக்குள்ளேயே எதனையோ கிசுகிசுத்துக் கொண்டார்கள். பின்னர், மெதுவாக நடந்தார்கள். அந்த ஆறு சோமாலிய கடற்கொள்ளைக்காரர்களின் முன்னால் வந்து நின்றார்கள். ஆளையாள் பார்த்துக்கொண்டார்கள். அடுத்த விநாடி,

சுதன் மறைத்து வைத்திருந்த 'ஸ்பிறே கில்லரை' எடுத்து அதனை இயக்கினான். அதிலிருந்து சிலுசிலுவென்று வெளியே பீச்சியடித்த மஞ்சள் திரவம் அந்த ஆறு கொள்ளையர்கள் மீதும் பன்னீர்த் துளிகள் போலத் தெறித்தன.சட்டை போடாத அவர்களின் மேனி சிலிர்த்தது. அந்தத் திரவம் பட்ட இடமெல்லாம் புழு ஊர்வதுபோல உணர்வேற்பட்டது. அதன் ஆபத்து புரியாத அந்த ஆறு பேரும் ஏளனமாக சிறுவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சில நிமிடங்களில் அவர்கள் ஆறு பேரும் மெது மெதுவாக தளத்தில் சரியலானார்கள். அஷ்வின் ஓடிச் சென்று மாலுமிகளின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டான். எல்லோரும் விருட்டென எழுந்து சிறுவர்கள் மூவரையும் வாரி எடுத்து உச்சி மூகர்ந்தார்கள். கைகளைப் பற்றி கொண்டார்கள். ஆசீர்வதித்தார்கள்.

"அந்த ஸ்பிறே'யில் என்ன இருக்கிறது....?" என்று தலைமை மாலுமி கேட்டார்.

அந்தக் கருவி பற்றி இராமபுத்திரன் சொன்ன விளக்கத்தை அவரிடம் ஒப்புவித்தான் அஷ்வின்.

"க்ளவர் போய்ஸ்" என்றார் அந்த அமெரிக்க முன்னாள் பொலிஸ் அதிகாரி வோர்னர் ரோஜர்.

மற்றவர்கள் சென்று கொள்ளைக்காரர்களிடம் இருந்த துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டார்கள்.

சுதன், தலைமை மாலுமியிடம் சென்று, "அங்கிள்! இப்போது நாங்கள் எப்படிப் போவது?" என்று கவலையோடு கேட்டான்.

"கவலைப்படவேண்டாம். கடற்படை கப்பல் ஒன்று இங்கு வந்துகொண்டிருக்கிறது. நாம் புறப்பட வேண்டியதுதான். கடற்படைக் கப்பலில் பாதுகாப்புடன் நாம் கடற்கொள்ளைக்காரர்கள் நடமாடும் இந்த இடத்தை விட்டு போய்விடலாம்" என்றார் தலைமை மாலுமி.

"அங்கிள், அந்த அதிசயக் கிரகத்தில் இருக்கும் பிள்ளைகள் எல்லோரையும் காப்பாற்ற வேண்டுமே!" என்று யோசனையுடன் கூறினான் பிரியன்.

"மிஸ்டர் வோர்னர் ரோஜர் அவர்களைக் காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டு இருக்கிறார்" என்றார் தலைமை மாலுமி.

(அடுத்த இதழில் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூற்றாண்டின் உன்னத இசைக்கருவி

தனி ஒருவரால் மாத்திரம் இசைக்கக்கூடிய இசைக்கருவிகளின் தொகுதியுடன்கூடிய புதிய இசைக்கருவியொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை இருபத்தோராம் நூற்றாண்டின் மிக உயர்ந்த இசைக்கருவி என்று கருதுகின்றனர். கிட்டார் முதல் வயலின் வரை அனைத்து இசையையும் இந்த புதிய இசைக்கருவியின்மூலம் இசைக்க முடியும். பியானோ மற்றும் ட்ரம்ஸ் இசைத் தொகுதிகளையும் இசைக்க முடியும். பல்வேறு இசைக்கருவிகளின் இசை நிறைந்த இந்த அபூர்வ இசைக்கருவியை 'Instrument 1' அல்லது ஆர்ட்டிஃபோன் (Artiphon) என அழைக்கின்றனர்.

இந்த இசைக்கருவிக்குப் பல்வேறு இசைக்கருவிகளின் ஒலியை எழுப்பக்கூடியதாக இருந்தாலும் இது பாரமற்ற ஓர் இசைக்கருவியாகும். கிட்டாரைப் போன்று தோலில் தொங்கவிட்டுக்கொண்டோ அல்லது மடியில் வைத்துக்கொண்டோ இதனை இசைக்கமுடியும். இந்த இசைக்கருவிகளுக்கேற்ப, தகுந்த குறியீடுகளையும் எமது வசதிக்கேற்ப அமைத்துக்கொள்ளலாம்.

கிட்டாரிலோ, வயலினிலோ உண்மையான குறியீடுகள் இல்லாவிட்டாலும், இதில் உண்மைக்குறியீடுகள் (Virtual Cords) உள்ளன. விரல் நுனியை அதன்மேல் கொண்டு செல்கையில் வேண்டிய இசையினை வழங்கமுடியும். இதனுள்ளே ஒலிபெருக்கி ஒன்றும் உள்ளது. ஒலிவாங்கி ஒன்றின்மூலம் குரலை ஒலிப்பதிவு



செய்துகொள்ளலாம். இதன் ஒலிக் கட்டுப்பாட்டை முழுமையாக iPhone ஒன்றினூடாக மேற்கொள்ளலாம்.

பொத்தான் ஒன்றை அழுத்துவதன் மூலம் இசைக்கருவியின் ஒலியை மாற்றிக் கொள்ளலாம். இது Apple நிறுவனத்தின் சாதனத்தோடு செயற்படும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தாலும் மிடி (Midi) எனும் உபசாதனம்பொருத்தப்பட்டதன் மூலம் வேறு தேவைகளுக்கும் அதனை பயன்படுத்தமுடியும்.



கலாநிதி மைக் புட்டேரா

அமெரிக்காவின் டெனசி குடியேற்றத்தில் அமைந்துள்ள நேஷ்வில் பெல்மொன்ட் பல்கலைக்கழகச் சமூக விஞ்ஞானத்துறை விரிவுரையாளரான மைக் புட்டேரா (Dr.Mike Butera) அவர்களுக்கே இதனைத் தயாரித்த பெருமை முழுவதும் சாரும். அவர் ஒலித்துறையிலும் இசையிலும் கலாநிதிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ரஞ்சித்**

வெல்லுங்கள்

## விஜய் உடன் Top News வழங்கும் வாரம் ஒரு iPod...




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 18.09.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




21.08.2013 'Top News' கேள்விக்கான விடை:
ஜப்பான்

ipod பரிசை பெறுபவர் :
கே.அஷ்வின்,
C26, 2/2, சொய்சாபுர
தொடர்மாடி, மொரட்டுவ.

விஜய் – Top News

இவ்வார கூப்பன் (11.09.2013)

........................................................

விடை: ..................................................

பெயர்: ..................................................

வீட்டு முகவரி: ........................................

........................................................

பாடசாலை முகவரி: ...................................

........................................................

வயது: ...................................................

தொ.பே.இல: ............................................

அனுப்ப வேண்டிய முகவரி:

iPod பரிசுப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கு

'சர்வதேச அமைப்பு' என்பது உலகளாவிய அங்கத்துவத்தினைப் பெற்றுள்ள ஓர் அமைப்பாகும். எனினும், இவை சர்வதேச அரசாங்கங்களுக்காகவே செயற்படுகின்றன. இந்த சர்வதேச அரச அமைப்புகளை, 'சர்வதேச அரசாங்க அமைப்புகள்' என்றும் அழைக்கலாம். ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பாச் சங்கம், ஐரோப்பிய கவுன்சில், சர்வதேச வர்த்தக அமைப்பு ஆகியவற்றை சர்வதேச அரசாங்க அமைப்புகளுக்கு உதாரணமாகக் கூறலாம். இவற்றில் அங்கத்துவம் வகிப்பவை சுயாதீன அரசாங்கங்களாகும். பொதுநலன் சார்ந்ததாகவே இவற்றின் குறிக்கோள்கள் அமைந்துள்ளன. இவற்றின்கீழ் மேலும் பல அமைப்புகள் இயங்குகின்றன. அந்தவகையில், ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கும் சர்வதேச அரச அமைப்புகள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.



## உணவு மற்றும் விவசாய அமைப்பு

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது, 1945 ஒக்டோபர் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் ரோமில் அமைந்துள்ளது.

## சர்வதேச தொழிலாளர் அமைப்பு

1919 இல் சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது. 1969 இல் இந்த அமைப்புக்கு நொபெல் சமாதானப் பரிசு கிடைத்தது.

## ஐக்கிய நாடுகளின் சர்வதேச சுற்றுலா அமைப்பு

UNWTO

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் முகமாக இந்த அமைப்பு 1974 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைமையகம் ஸ்பெய்னின் மெட்ரிட் நகரில் அமைந்துள்ளது.

## சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு

1947 ஏப்ரல் 4 ஆம் திகதி சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் கனடாவின் மொன்ட்றியல் நகரில் அமைந்துள்ளது.

## சர்வதேச கடல்சார் செயற்பாடுகள் தொடர்பான அமைப்பு

1959 இல் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் லண்டனில் அமைந்துள்ளது.

## போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம்

UNODC
United Nations Office on Drugs and Crime

1997 இல் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் வியன்னாவில் அமைந்துள்ளது.

noolaham.org | aavanaham.org

# ...தம் அமைப்புகள் சில...

## உலக புத்திசார் சொத்துக்கள் தொடர்பான அமைப்பு

இந்த அமைப்பினூடாக, புத்திசார் சொத்துக்கள் சட்டம் அமுலாக்கப்படுகின்றது. இந்த அமைப்பு 1967 ஜுலை 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

## சர்வதேச அதிகாரங்களுக்கான உயர் ஸ்தானிகராலயம்

இந்த அமைப்பு 1946 ஏப்ரல் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாவது உலகப் போரின் விளைவாக இந்த அமைப்பினை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற்பட்டது.

## ஐக்கிய நாடுகளின் ஒன்றிணைந்த எச்.ஐ.வி.எயிட்ஸ் நிகழ்ச்சித் திட்டம்

1994 இல் இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம் எச்.ஐ.வி.எயிட்ஸிலிருந்து விலகியிருத்தல் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதாகும். இதன் தலைமையகம் சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

## ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்

இந்த அமைப்பானது, உலகம் முழுவதும் உள்ள சிறுவர்களுக்கான அமைப்பாகும். 1946 டிசம்பர் 11 ஆம் திகதி இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் காரணமாக, அழிவை எதிர்கொண்ட நாடுகளில் உள்ள சிறார்களுக்குத் தேவையான உணவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

## ஐக்கிய நாடுகளின் மனித குடியிருப்புகள் நிகழ்ச்சித் திட்டம்

அனைவருக்கும் இருப்பிடம் மற்றும் வளம்மிக்க சுற்றாடலைக் கட்டியெழுப்புவதே இதன் பிரதான நோக்கமாகும். 1978 இல் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் கென்யாவின் நைரோபி நகரில் அமைந்துள்ளது.

## சர்வதேச தபால் சங்கம்

1874 ஒக்டோபர் 9 ஆம் திகதி இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் அமைந்துள்ளது.

## ஐக்கிய நாடுகளின் அணுசக்தி ஆணைக்குழு

1946 ஜனவரி 24 ஆம் திகதி இந்த ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. எனினும், 1949 முதல் இந்த ஆணைக்குழு ஸ்தம்பிதமடைந்துள்ளது. 1952 இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்த ஆணைக்குழு கலைக்கப்பட்டது.

## ஐக்கிய நாடுகளின் கைத்தொழிற்துறை அபிவிருத்தி அமைப்பு

இந்த அமைப்பானது, 1966 இல் ஆரம்பிக்கப்பட்டது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கைத்தொழிற்துறைகளுக்காகப் பெரும்பங்களிப்பை வழங்கும் இந்த அமைப்பின் தலைமையகம் ஒஸ்ட்ரியாவின் வியன்னாவில் அமைந்துள்ளது.

## ஐக்கிய நாடுகளின் மூலதன அபிவிருத்தி நிதியம்

இதன் ஊடாகக் குறை அபிவிருத்தி நாடுகளுக்குப் பெரும் பங்களிப்புக் கிடைக்கின்றது. 1966 ஆம் ஆண்டு இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

(இ)



# காட்டுத்தீயின்போது உயிரைப் பணயம் வைத்து இடம்பெற்ற இரண்டு நடவடிக்கைகள்

அண்மையில் இத்தாலியின் தேசிய வனவியல் பூங்காவொன்று காட்டுத்தீயினால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியது.வழமையாகத் தீயை அணைக்கும் முறையில் இதனை அணைத்துவிட முடியாமல் இருந்த நிலையில், இந்தக் கோரத் தீயை அணைப்பதற்கு ஹெலிகொப்டர்கள் மற்றும் தீயணைப்பு விமானங்களின் உதவியும் நாடப்பட்டது.

அதற்கமைய, மிகவும் திறமைவாய்ந்த விமானிகள் தமது உயிரையும் பணயம் வைத்து கோரமான தீக்கருகில் சென்று நீரை விசிறினர். இதேவேளை, இந்தக் காட்சிகள் மிகவும் சிறப்பாகப் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், காட்டுத்தீயினால் சிறைப்பட்ட மக்கள், அதிலிருந்து மீள்வதற்குப் போராடும் விதமும் சிறப்பான முறையில் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளது. என்டோனியோ கிராம்போன் எனும் இத்தாலிய புகைப்படக் கலைஞரே, தனது உயிரைப் பணயம் வைத்து இந்தச் சாகசத்தை நிகழ்த்தியுள்ளார். இதனைப் படம்பிடிக்க அவர் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்.

இத்தாலியின் செலர்னோ பிராந்தியத்திற்குட்பட்ட சிலென்டோ மற்றும் வல்லோடி டயனோ என்ற தேசிய வனவியல் பூங்காப் பகுதியிலேயே இந்தக் காட்டுத்தீ பரவியுள்ளது.







"ஒவ்வொரு வெப்பக் காலத்திலும் இங்கு வழமைக்கு மாறாக வெப்பநிலை மிகவும் அதிகரிப்பதுடன், கிடைக்கும் மழைவீழ்ச்சி மிகவும் குறைவாகும். இதனால், இந்த அழகிய வனாந்தரப்பகுதி மிகவும் மோசமான நிலையை அடைந்துவிடுகின்றது. "நாம் எவ்வளவுதான் முயன்றாலும் இந்த வனாந்தரத்தின் பெரும்பகுதி காட்டுத்தீயினால் அழிவடைவதைத் தடுக்க முடிவதில்லை" என்று என்டோனியோ கூறுகின்றார்.

"ஒவ்வொரு வெப்பக்காலப்பகுதியிலும் விடுமுறையைக் கழிக்க நான் சிலென்டோ நகருக்குச் செல்வதனாலேயே இந்த அரிய புகைப்படங்களை என்னால் எடுக்க முடிந்தது. இந்தப் பகுதிகள் எனக்கு மிகவும் பழக்கமானவை. அதனால்தான் காட்டுத்தீ தீவிரமாகப் பரவியபோதும் என்னால் பாதுகாப்பாகப் புகைப்படங்களை எடுக்க முடிந்தது. இவ்வாறான தருணங்களில் தீ பரவும் இடத்திலிருந்து வெகு தூரத்தில் இருப்பது அவசியம். ஏனெனில், அது பரவும் வேகத்தை எம்மால் தீர்மானிக்க முடியாது" என்றும் அவர் கூறுகிறார். புகைப்படப்பிடிப்பு என்பது தனக்கு மிகவும் விருப்பமானதொரு வேலையென இதன்போது என்டோனியோ தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் (தரம் - 4)

பெயர்: ................................................... ..

★ சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

01) இரண்டாயிரத்து முந்நூற்றுப்பத்து என்பதை சொற்களில் எழுதினால்;
1. 2300 2. 2110 3. 2310 4. 2311

02) 101, 202, 303, ................. அடுத்து வரும் எண் யாது?
1. 304 2. 504 3. 404 4. 104

03) 0.6 என்ற தசம எண்ணை சாதாரண பின்னமாக எழுதுக.
1. $\frac{6}{10}$ 2. $\frac{6}{100}$ 3. $\frac{0.6}{10}$ 4. $\frac{0.6}{100}$

04) 1.4 + 0.3 இதன் கூட்டுத் தொகை யாது?
1. 1.7 2. 17 3. 2.7 4. 2.7

05) 2342-0332=............... இடைவெளியில் வரவேண்டிய எண் எது?
1. 1010 2. 2010 3. 2674 4. 2011

06) ரூபா 5 இல் உள்ள 50 சத நாணயங்கள் எத்தனை?
1. 5 2. 10 3. 6 4. 8

07) 1 மணித்தியாலத்தில் உள்ள நிமிடங்களின் எண்ணிக்கை யாது?
1. 60 2. 30 3. 24 4. 7

08) பாடசாலையில் இருந்து 1.45 இற்குப் புறப்பட்ட கமலா, 2.10 இற்கு வீட்டை அடைந்தாள். எனின், அவள் வீட்டை அடைய எடுத்த காலம் எவ்வளவு?
1. 15 நிமிடங்கள் 2. 25 நிமிடங்கள்
3. 10 நிமிடங்கள் 4. 30 நிமிடங்கள்

09) லீப் வருடத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?
1. 365 2. 366 3. 364 4. 360

10) 1 தொடக்கம் 20 வரையுள்ள எண்களில் உள்ள 2 களின் எண்ணிக்கை யாது?
1. 3 2. 4 3. 2 4. 1

11) 16 இல் உள்ள 2 இன் மடங்குகள் எத்தனை?
1. 16 2. 4 3. 10 4. 8

12) 5x4=20 இப் பெருக்கத்திற்கு சமமான பெருக்கம்;
1. 2x10 2. 5x5 3. 3x10 4. 5x3

13) நாதன் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை தனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றான். எனின், அவன் பிறந்த திகதி பின்வருவனவற்றுள் எது?
1. பெப்ரவரி 28 2. பெப்ரவரி 29
3. மார்ச் 9 4. பெப்ரவரி 27

14) பின்வருவனவற்றுள் முதன்மை எண் எது?
1. 4 2. 6 3. 9 4. 2

15) $\frac{2}{3} + \frac{1}{3}$ =....................
1. $\frac{1}{3}$ 2. $\frac{3}{3}$ 3. $\frac{2}{3}$ 4. $\frac{3}{6}$

16) ஒரு பஸ் தரிப்பிடத்தில் 10 பயணிகள் ஏறினர். 2 பயணிகள் இறங்கினர். ஏற்கனவே பஸ்ஸில் 12 பயணிகள் இருந்தனர். எனின், தற்போது பஸ்ஸிலுள்ள பயணிகளின் எண்ணிக்கை யாது?
1. 12 2. 24 3. 4 4. 20




17) ஒரு கனவுருவில் இருக்கக்கூடிய சதுரமுகங்களின் எண்ணிக்கை யாது?
1. 4 2. 8 3. 2 4. 6

18) டின் மீன் ஒன்றில் காணக்கூடிய தட்டையான முகங்களின் எண்ணிக்கை யாது?
1. 2 2. 3 3. 4 4. 1

19) 1210 இன் நூறினிடத்தின் பெறுமானம் யாது?
1. 200 2. 20 3. 10 4. 100

20) 20 மாம்பழங்களை ரூபா 40 இற்கு வாங்கினால், 1 மாம்பழத்தின் விலை யாது?
1. ரூபா 20 2. ரூபா 10 3. ரூபா 3 4. ரூபா 2

01) 1. 3.42+2.10 = ....................................
2. $\frac{2}{5} + \frac{1}{5}$ = ....................................
3. 712-210 = ....................................
4. 0.4 = .................................... (பின்னத்தில் தருக)
5. 5+10 = 3x ...............................

02) 01. ஒரு கடையில் 230 தோடம்பழங்களும் 50 அப்பிள் பழங்களும் இருந்தன. அவற்றில் 70 தோடம்பழங்களும் 22 அப்பிள் பழங்களும் விற்கப்பட்டன. எனின், மிகுதியாக உள்ள பழங்கள் எத்தனை? ................................................

02. கண்ணாவுக்கு 1 நாளைக்கு 1200ml பானம் தேவை. எனின், அவனுக்கு 5 நாட்களுக்குத் தேவையான பானத்தின் அளவு யாது?......................................................

03. ஒரு சதுரமுகியிலுள்ள உச்சிகள் ............ விளிம்புகள் .............. பக்கங்கள் ..............

04. ஒரு மரத்தில் மூன்று குருவிகள் இருந்தன. சிறுவனொருவன் கல்லெறிந்தபோது, ஒரு குருவி வீழ்ந்தது. மரத்தில் எஞ்சிய குருவிகள் யாவை?.................................

05. ஒரு மைதானம் 75m நீளத்தையும் 50m அகலத்தையும் கொண்டுள்ளது. அந்த மைதானத்தின் சுற்றளவு யாது?...................

06. ஒருவருக்கு 200ml வீதம் 12 பேருக்கு எத்தனை ml பானம் தேவை?................................................

07. ஒரு ஓட்ட வீரன், தான் ஓடவேண்டிய தூரத்தில் சரிபாதியை வேகமாகவும் மிகுதித் தூரத்தை மெதுவாகவும் ஓடி முடித்தான். அவன் வேகமாக ஓடிய தூரம் யாது? (அவன் ஓடவேண்டிய தூரம் 10km)

08. இரண்டாவது சதுர எண் 4 என்பது போல, நான்காவது சதுர எண் யாது?......................................................

09. இரண்டு டசின் பேனாக்களின் விலை ரூபா 288. எனின், 1 பேனாவின் விலை யாது?........................

10. $\frac{1}{3}$ இற்கு சமவலுப் பின்னம் 2 தருக.
.........................................................

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



‘கல்வி கற்க வேண்டும்’ என்ற எண்ணமும் உறுதியும் திடமாக நம்மிடம் இருந்தால், கல்வி கற்பதில் இருக்கின்ற தடைகள் யாவற்றையும் தகர்த்து எறிய முடியும். பொதுவாக, மாணவர்கள் கூறும் சிறிய சிறிய காரணங்களே அவர்களை சோம்பேறிகளாக, தன்னம்பிக்கை அற்றவர்களாக மாற்றிவிடுகின்றன. அந்தவகையில், இன்று பரவலாக அவர்கள் கூறும் காரணங்களில் ஒன்றே ‘வறுமை’ ஆகும். அதற்கமைய, குடும்பத்தில் வறுமை நிலவும் பட்சத்தில், வேண்டும். சோம்பலைத் தவிர்த்து முயற்சி செய்ய வேண்டும் என்பது போல, வறுமையை விடுத்துக் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் மாணவர்களிடம் குறைந்துகொண்டே செல்கின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் தன்னம்பிக்கை அற்ற சிந்தனைதான்!

பெரும்பாலான மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஆற்றல், முயற்சி இருந்தும்கூட, அவர்கள் வறுமையின் எல்லைக்குள் மட்டுமே நின்று சிந்திக்கின்றனர். இதனால், கல்வி கற்க வேண்டும் என்ற சிந்தனை அவர்களிடம் ஏற்படுவதில்லை. எனினும்,

# வறுமையைக் காரணங்காட்டாமல் தன்னம்பிக்கையோடு செயற்படுங்கள்



மாணவர்கள் ஒருபோதும் வறுமையைக் காரணம் காட்டித் தமது எதிர்பார்ப்புக்கள், தேவைகள் என்பவற்றைச் சிதைத்துவிடக் கூடாது. வறுமையை உடைக்கும் கருவி கல்வி ஒன்றே என எண்ணிக் கல்வி கற்றிட முன்வர வேண்டும்.

கல்வியைப் பெற்றால் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கலாம்- முதலில் முற்றுப்புள்ளி வைப்பது கல்விக்கே ஆகும். அதாவது, வறுமை ஏற்பட்டால் கல்வி கற்க முடியாது என்ற எண்ணத்திற்குப் பெரும்பாலானோர் உட்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.



உண்மையிலேயே இது தவறானதோர் அணுகுமுறையாகும். ஏனெனில், வறுமையைப் போக்குவதற்குக் கல்வி கைகொடுக்கின்றது என்பதைப் பலரும் அறியாமல் இருக்கின்றனர். ஆகவே, கல்வியைச் சிறப்பாகக் கற்று, முன்னேற வேண்டும் என்ற தன்னம்பிக்கையை பலரும் வளர்த்துக்கொள்வதற்குப் பதிலாக வறுமையைக் காரணங்காட்டி வாழ்வில் தோல்வி அடைகின்றனர். துன்பத்திலிருந்து விடுபட்டு மகிழ்ச்சிபெற வாழ்வில் வெற்றி பெறலாம் என்ற தன்னம்பிக்கையை தம்முள் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே, வறுமை என்பது கல்விக்கு ஒரு தடையன்று என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். வறுமை காணப்பட்டாலும், அதையே தமது உந்துசக்தியாக எடுத்து கல்வியைக் கற்று முன்னேற வேண்டும். கல்வி என்ற பரப்புக்குள் நாம் பின்நோக்கிக் கால் வைக்கக்கூடாது. எப்போதும் முன்நோக்கியே செல்ல வேண்டும். அதுவே எம்மை நாளைய உலகில் உயர்த்திவிடும்.


எம்.எ.எஸ்.சப்னா

# செவ்வாய் செல்ல மக்களிடையே ஆர்வம்!!

2023 ஆம் ஆண்டளவில் செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்களை நிரந்தரமாகக் குடியேற்றும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதுதான் 'Mars One' எனும் திட்டம். ஒல்லாந்து நாட்டின் Mars One தனியார் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டமாகவே இது அமைந்துள்ளது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இன்றைய தொழில்நுட்பங்களைக் கொண்டு செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்களை வாழ வைக்க முடியும் என்றே Mars One திட்டத்தின் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.





Mars One திட்டத்தின் மூலம் செவ்வாய்க் கிரகம் செல்வதற்காக அண்மையில் Online மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தநிலையில், சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் அதற்காக விண்ணப்பித்திருந்தனர். அதன்படி, நாடுகள் வாரியாகக் கிடைக்கப்பெற்ற அதிக விண்ணப்பங்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களுக்கமைய, ஐக்கிய அமெரிக்காவிலிருந்தே ஏராளமானோர் விண்ணப்பித்துள்ளனர். அங்கிருந்து 37,852 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவ்வாறே, சீனா (13,124), பிரேசில் (8,686), இந்தியா (8,107), ரஷ்யா (7,138), பிரித்தானியா (6,999), மெக்ஸிகோ (6,771), கெனடா (6,593), ஸ்பெய்ன் (3,621) மற்றும் பிலிப்பைன்ஸ் (3,516) என்ற ரீதியில் மேற்படி நாடுகளிலிருந்து அதிகளவான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




மசாசுசெட்ஸ் தொழில்நுட்பக் கழக வானியலாளர்கள், புதிய புறக்கோள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் புறக்கோள் ஆனது, 8.5 மணித்தியாலங்களில் தனது சூரியனைச் சுற்றி வருவதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர். இதற்குக் ‘கெப்லர் 78b’ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கெப்லர் 78b புறக்கோளுக்கும் அதன் சூரியனுக்கும் இடையேயான தூரமானது,

# 8.5 மணித்தியாலங்களில் தனது சூரியனைச் சுற்றும் புறக்கோள் கண்டுபிடிப்பு!



நமது சூரியனுக்கும் புதனுக்கும் இடையேயான தூரத்தைவிட 40 மடங்கிலும் குறைந்தளவில் அமைந்துள்ளதென வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால், இதன் மேற்பரப்பு வெப்பநிலை 5000 கெல்வின் ஆகக் காணப்படுகின்றது. பூமியின் அளவை ஒத்ததாக உள்ள கெப்லர் 78b ஆனது, உருகிய பாறைகளைக் கொண்ட சமுத்திரத்தினால் சூழப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இப்புறக்கோளில் இருந்து வரும் ஒளியைக் கெப்லர் வானியல் தொலைக்காட்டி மூலம் வானியலாளர்கள் அவதானித்துள்ளனர். இந்த ஒளி, புறக்கோளின் மேற்பரப்பில் இருந்து வெளியேறியதாக இருக்கலாம் அல்லது அதன்மீது பட்டுத் தெறித்து வந்த கதிர்களாக இருக்கலாம் என வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5332
எஃப்.பஷ்ரா,
பட்டாணிச்சூர்,
வவுனியா.


அங். இல: 5333
இ.ரிஷான்,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.


அங். இல: 5334
எஸ்.ஸஹ்ரியா,
தேவஹுவ,
கலேவெல.


அங். இல: 5335
அப்துல் மாலிக்,
பழைய வீதி,
காத்தான்குடி-01.


அங். இல: 5336
ஜெ.தேனுஜன்,
கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.


அங். இல: 5337
ஏ.எம்.அம்ஹர்,
இப்பாகமுவ,
குருணாகலை.



அங். இல: 5338
கி.பிரியதர்ஷன்,
எழில்நகர்,
மன்னார்.


அங். இல: 5339
கி.தபேசன்,
புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.



அங். இல: 5340
அ.மு.ஆபித்,
புதிய வீதி,
கல்முனை-14.


அங். இல: 5341
ஞா.அஜனா,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.


அங். இல: 5342
உ.ஹரிதாஸ்,
சேனைக்குடியிருப்பு,
கல்முனை.


அங். இல: 5343
எம்.றஸீட்கான்,
அல்லவெவ,
கெபிதிகொள்ளாவ.

# மாணவர்களது உள்வாங்கும் திறன்



காட்சி மற்றும் செயற்பாடுகளை உள்வாங்கிக்கொள்ளும் மாணவர்கள் காட்சி வழியாகவே சிந்திக்கிறார்கள். தகவல்களைத் தக்கவைத்துக்கொள்ள அவற்றை மனதில் பிம்பங்களாகவே அவர்கள் பதிவுசெய்துகொள்கின்றனர். வரைபடங்கள், கார்ட்டூன்கள், படங்கள், வீடியோ மற்றும் திரைப்படங்களை மிகுந்த உற்சாகத்துடன் பார்வையிடுவார்கள்.

## இவர்களின் தனித்திறன்கள்

புதிர்களை உருவாக்குதல், வாசித்தல், எழுதுதல், வரைபடங்களைப் புரிந்துகொள்ளுதல், திசைகளை அறியும் திறன், வர்ணம் தீட்டுதல், வரைதல், உருவக மற்றும் ஒப்புமை காட்சிகளை உருவாக்குதல், காட்சிப்படங்களைத் திறனறிதல், பயன்பாட்டுப் பொருட்களை வடிவமைத்தல், பொருத்துதல் என்பன இவர்களின் தனித்திறன்களாக அமையும்.

## இவர்கள் விரும்பும் வாழ்க்கைத் தொழில்கள்

மாலுமி, சிற்பி, ஓவியர், கண்டுபிடிப்பாளர், கட்டடக்கலைஞர், நிர்மாணிப்பாளர்,இயந்திர வல்லுனர், பொறியியலாளர்.

## சொற்களையும் மொழியையும் சிறப்பாகக் கையாளும் திறன்




இவ்வகையில் கற்போர் மேம்பட்ட கேட்கும் திறன் பெற்றிருப்பர், சிறந்த பேச்சாளர்களாக விளங்குவர். இவர்களின் சிந்தனை, காட்சிகளில் அல்லாமல் சொற்களின் வடிவில் இருக்கும்.

## இவர்களின் தனித்திறன்கள்

கவனித்தல், பேசுதல்,எழுதுதல், கதை சொல்லுதல், விபரித்தல், கற்பித்தல், துணுக்குகள் கூறுதல், சொல்லின் பொருள் மற்றும் மொழிப்பயன்பாடு பற்றி அறிந்திருத்தல், தகவல்களை நினைவில் வைத்துக்கொள்ளல், மொழிப் பயன்பாட்டை அறிதல்.

## இவர்கள் விரும்பும் வாழ்க்கைத் தொழில்கள்

கவிஞர், நிருபர், எழுத்தாளர், ஆசிரியர், வழக்கறிஞர், அரசியல்வாதி, மொழிபெயர்ப்பாளர். (தொடரும்)



**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)


Dialog தொலைபேசியில் ஆங்கிலம் மூலம் SMS ஊடாக

* தினமும் அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகள், IT Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்)
* ஆங்கில Proverb, Idiom மற்றும் Quote களை தினமும் பெறலாம்.
* முக்கிய செய்திகள், பொது அறிவு, புதிய கண்டுபிடிப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.





# தெரிந்து கொள்வோம்



* அண்மையில் சுதந்திரம் பெற்ற ஐரோப்பிய நாடு எது? அது எந்த நாட்டின்கீழ் இருந்தது?
  கிறீன்லாந்து.டென்மார்க் நாட்டின் ஆட்சியிலிருந்தது.



* கல்லில் கலைவண்ணம் கண்ட மகாபலிபுர சிற்பங்கள் எந்த மன்னர்கள் காலத்தில் செதுக்கப்பட்டன?
  பல்லவ மன்னர்கள் காலத்தில்.
* தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் தொல்காப்பியரால் இயற்றப்பட்டதாகும். குட்டித் தொல்காப்பியம் எனப்படும் நன்னூலை இயற்றியவர் யார்?
  பவணந்தி முனிவர்.



* ஆர்த்தர் சீ கிளார்க் இயற்றிய பிரதான நூல்கள் எவை?
  A Space Odyssey நூல்கள்.



* உலகில் மிகச் சிறிய பரப்பளவுடைய நாடு வத்திக்கான். உலகில் பெரிய நிலப்பரப்புக்கொண்ட நாடு எது?
  ரஷ்யா.



* இந்தியாவில் தமிழ்நாட்டுக்குரிய முதல் பெண் முதலமைச்சர் யார்?
  ஜானகி ராமச்சந்திரன்.

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**


# விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | ரூபா 390/= | 6 மாதத்திற்கு | ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | ரூபா 780/= | 1 வருடத்திற்கு | ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர்:- ........................................
........................................
முகவரி:- ........................................
........................................
தொ.பேசி:- ........................................
பத்திரிகையின் பெயர்:- ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
........................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வைத் திறனைக் கைத்தொலைபேசியில் பரிசோதிக்கலாம்!






Illustration: Tiago Allen



portable eye examination kit

பார்வைத் திறன் பரிசோதனையைப் பலருக்கும் கொண்டுசேர்க்கும் விதமாக கைத்தொலைபேசி Application ஒன்றை London School of Hygiene and Tropical Medicine ஐச் சேர்ந்த ஆய்வாளர்கள் தயாரித்துள்ளனர். 'Portable Eye Examination Kit'-சுருக்கமாக 'PEEK' என்று இந்த Application இற்கு பெயரிடப்பட்டுள்ளது.

இந்த Application நவீன கைத்தொலைபேசி களில் இருக்கும் கெமராக்களையும் Flash களையும் பயன்படுத்தி கண்ணின் விழித்திரையை ஸ்கேன் செய்கிறது. அத்துடன், ஒருவருடைய பார்வைத் திறனை அளக்க உதவும் வேறுபட்ட அளவுகளைக் கொண்ட எழுத்துக்களும் இந்த Application இல் உள்ளன. இந்த Application ஐப் பயன்படுத்தி ஒருவரது விழித்திரையையும் பார்வைத் திறனையும் பரிசோதிக்கும்போது, அந்த விபரங்கள் கைத்தொலைபேசி யிலேயே பதியப்படுகின்றன. பின்னர் அந்த விபரங்களை ஒரு மருத்துவருக்கு உங்களால் மின்னஞ்சல் செய்யவும் முடியும்.

PEEK Application ஐக் கொண்டு கென்யாவில் பலருடைய கண்களைப் படமெடுத்து, அந்தப் படங்கள் லண்டனி லுள்ள Moorfields கண் மருத்துவ மனைக்கு அனுப்பப் பட்டுள்ளன. அங்கு, கண் பரிசோதனைக் கருவிகளால் எடுக்கப்பட்ட படங்களையும் இந்தப் படங்களையும் நிபுணர்கள் ஒப்பிட்டபோது, கைத்தொலைபேசியால் எடுத்த படங்களைக் கொண்டு கண் கோளாறுகளை ஓரளவுக்குக் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது. எவ்வாறாயினும், இந்த ஆய்வு இன்னும் முழுமை அடையவில்லை என்றாலும், கைத்தொலைபேசி யில் எடுத்த படங்களை வைத்து ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு ஏதோ ஒரு வகையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆக, இந்தப் புதிய தொழில்நுட்பம் முன்னேற்றம் கண்டால், அதன்மூலம் மிகப்பெரிய பலன் கிடைக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# Apple இன் 'MobileMe' சேவை நிறைவுக்கு வருகிறது...!





பல்வேறு முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் தற்போது தமது முன்னைய இலவச சேவைகளுக்கு மாற்றீடாக புதிய நவீனமயப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்க ஆரம்பித்துள்ளன. அந்த வரிசையில், Apple நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 'MobileMe Online Storage' சேவையும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது.

இந்தச் சேவைக்குப் பதிலாக Apple இனால் 'iCloud' எனும் புதிய சேவை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. எனினும், MobileMe சேவையினூடாக Apple நிறுவனமானது, தொடர்ந்தும் தனது பயனர்களுக்கு 20GB சேமிப்பு வசதியினை இலவசமாக வழங்கி வருகின்றது.



எனினும், இந்தச் சேவை நிறுத்தப்படும்போது, இதனைப் பயன்படுத்துப வர்கள் iCloud இன் 5GB இலவச சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமான சேமிப்பிட வசதியைப் பயன்படுத்த வேண்டுமாயின், வருடத்திற்கு 20 டொலர்கள் செலுத்தி 10GB சேமிப்பிடத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் Apple நிறுவனம் தெரிவித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இங்கே மடிக்கவும்

இங்கே வெட்டவும்

# உங்கள் தினசரித் திட்டமிடலை இலகுவாக்க ஓர் இணையத்தளம்




உங்கள் செயல்களைத் திட்டமிட்டு செயல்பட உதவும் இணையத்தளம் ஒன்று, இதைவிட எளிமையாக இருக்கமுடியாது என்று சொல்ல வைக்கிறது 'dailytodo.org' எனும் இணையத்தளம். அழகான வெள்ளைக்காகிதம் போன்ற



முகப்புப் பக்கம், அதன் நடுவே உங்களுக்கான குறிப்பேடு- இவ்வளவுதான் இந்தத் தளம். இந்தக் குறிப்பேட்டில்தான் அந்தந்த நாட்களில் நீங்கள் செய்ய நினைக்கும் பணிகளைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

திட்டமிட்டுச் செயல்படுவதற்கு நீங்கள் இந்தத் தளத்தைப் பயன்படுத்துவதெனத் தீர்மானித்தால், இந்தத் தளத்தில் உங்களுக்கான குறிப்பேட்டில் ஒவ்வொரு தினத்திற்கு மான பணிகளைக் குறித்து வைக்கத் தொடங்கிவிடலாம். செய்ய நினைப்பதை டைப் செய்து, Save Tasks என்பதை க்ளிக் செய்தால் போதும்; அந்தக் கட்டளை நம் நினைவூட்டலுக்காகக் காத்திருக்கும். இப்படி ஒவ்வொரு செயலையும் தெளிவாகச் சேமித்துக்கொள்ளலாம்.

டைப் செய்யத் தொடங்கியதுமே நமக்கான தனி இணைய முகவரி உருவாக்கப்பட்டுவிடுகிறது. அடுத்த முறையில் இருந்து அந்தப் பிரத்தியேக



முகவரியில் உள்ள குறிப்பேட்டை நாம் பயன்படுத்தலாம். புதிய பணிகளைக் குறித்துவைக்க, Edit என்னும் இடத்தில் க்ளிக் செய்தால், பழைய குறிப்பேடு வந்துநிற்கும். அதில் நாட்காட்டி போல வரிசையாக திகதி அடிப்படையில் குறித்து வைத்த பணிகளை நாம் காணலாம். இங்கு ஆங்கிலத்தில்தான் டைப் செய்ய வேண்டும். ஆனால், தமிழில் பயன்படுத்த விரும்பினால், வேறு ஒரு செயலியில் டைப் செய்து இங்கே Paste செய்துகொள்ளலாம். இதைப் பயன்படுத்திப்பாருங்கள். திட்டமிடல் உங்களுக்கும் வெற்றி தரட்டும். இதன் முகவரி http:// www. dailytodo. org ஆகும்.





# Google Plus தளத்தில் Audio கோப்புக்களைப் பகிர்வது எப்படி?




பிரபலமான சமூக வலைத்தளங்களான Facebook மற்றும் Google Plus என்பன .exe மற்றும் Audio போன்ற சில கோப்புக்களைத் தரவேற்றும் வசதியினைத் தருவதில்லை. எனினும், Google Plus தளத்தில் Audio கோப்புக்களைத் தரவேற்றம் செய்வதற்கு வேறு துணை இணையத்தளங்களை நாம் பயன்படுத்தமுடியும்.

அந்தவகையில், Audio கோப்புக்களைத் தரவேற்றம் செய்யக்கூடிய வசதியையும் பகிர்ந்துகொள்ளும் வசதியினையும் தரும் பிரபலமான 'SoundCloud' தளத்தினை இதற்காக நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதற்கு http:// www.soundcloud.com/ தளத்திற்குச் சென்று, ஒரு கணக்கினை இலவசமாக ஆரம்பித்துக் கொள்ளுங்கள்.




உங்கள் Audio கோப்பினை அங்கு தரவேற்றம் செய்யுங்கள். குறித்த கோப்புத் தரவேற்றம் செய்யப்பட்டதன் பின்னர், அதனைச் சேமித்துவிட்டு, Share பொத்தானை அழுத்தி அந்தக் கோப்புக்குரிய URL இனைப் பெற்றுக்கொள்ளுங்கள். பின்னர், அதனை Google Plus தளத்தில் பிரதி செய்து நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம்.




12

இங்கே வெட்டவும்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Iconia W3
# விலை குறைக்கப்பட்டுள்ளது...

Acer நிறுவனமானது, குறைந்த விலையில் 'Iconia W3' எனும் புதிய Tablet PC ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

8.1 அங்குல அளவு, 1280x 800 Pixel



Resolution உடைய LED தொடுதிரையினைக் கொண்டுள்ள இந்த Tablet PC ஆனது, 1.8GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Dual Core Processor இனையும் உள்ளடக்கியுள்ளது.

இதன் சேமிப்பு நினைவகமாக 32GB மற்றும் 64GB தரப்பட்டுள்ளதுடன், இவற்றினை SD கார்ட்களின் உதவியுடன் மேலும் அதிகரித்துக்கொள்ளவும் முடியும். தலா 2 Megapixel களை உடைய பிரதான மற்றும் துணைக்கெமராக்களும் இதில் காணப்படுகின்றன.




இதன் அறிமுக விலை 380 டொலர்களாக இருந்தபோதிலும், தற்போது 299 டொலர்களாகக் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Introducing Games & Software Downloads

The Best Way to Get Games and Software



Games & Software Downloads are our solution for delivering games and software easily to your PC. You can download games and software after your purchase. Here is how it works:

# Amazon தளத்தில் மென்பொருட்கள், Video Game களை கொள்வனவு செய்யலாம்!

amazon.co.uk


Online Shopping சேவையை வழங்கிவரும் Amazon.com தளமானது, தற்போது




புதிய சேவை ஒன்றினை அறிமுகப்படுத்துகின்றது.

வாடிக்கையாளர்கள் தரவிறக்கம் செய்யக்கூடிய வகையிலும் கொள்வனவு செய்யக்கூடிய வகையிலும் மென்பொருட்கள் மற்றும் Video Game களை இந்தத் தளம் வழங்குகின்றமையே அதன் புதிய சேவை ஆகும்.

புதிதாக வெளியாகும் மென்பொருட்கள் மற்றும் Video Game களை இந்தத் தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சேவைமூலம் ஏறத்தாழ 10GB கொள்ளளவுக்கு அண்மையான அளவுள்ள கோப்புக்களை கொள்வனவு செய்து தரவிறக்கிக்கொள்ள முடியும் என Amazon தெரிவித்துள்ளது.




தற்போது பிரித்தானியாவில் அறிமுகமாகியுள்ள இச்சேவையானது, விரைவில் ஏனைய நாடுகளிலும் கிடைக்கப்பெறும் என்பது பலருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியே!

**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கனினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Windows 8 இயங்குதளத்தில் Safe Mode இற்குச் செல்வது எவ்வாறு?






Windows இயங்குதளத்தில் பிரச்சினைகள் ஏற்படும்போதெல்லாம், ஆபத்தில் உதவும் நண்பனாக வருவது 'Safe Mode' எனப்படும் பாதுகாப்பான இயக்க முறை ஆகும். இதன் மூலம், கணினி இயங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, Windows இன் இயக்கத்திலா அல்லது Application Programme களிலா ஏற்பட்டுள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

Windows 8 ஐக் கொண்டுள்ள கணினி அல்லது மடிக்கணினியை, Safe Mode இல் Boot செய்வது, முன்னைய இயங்குதளங்களில் மேற்கொண்டதைப் போல அவ்வளவு எளிதானதன்று. ஆனால், இந்த இயங்குதளத்திலும் Safe Mode இல் Boot செய்திடலாம்.






அதற்கான வழிகளை இங்கு பார்ப்போம்.


உங்களுடைய கணினியானது, சரியாக Shut-down ஆகவில்லை என்றாலோ அல்லது Boot ஆக மறுத்தாலோ Safe Mode இயக்கம்தான் உங்களுக்கு உதவும். Safe Mode இல், Windows சில குறிப்பிட்ட File கள் மற்றும் Driver களுடன் இயங்கத் தொடங்கும். எந்த மென்பொருளும் Programme உம் Safe Mode இல் தானாக இயங்கத் தொடங்காது. அத்துடன், உங்களுடைய கணினி Network இலும் இணையாது. இதனால், கணினியில் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அது Network இல் இணைக்கப்பட்டுள்ள ஏனைய கணினிகளுக்குப் பரவும் வாய்ப்பு இல்லை. இதனால், கணினி அல்லது நம் தகவல்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல், நம் கணினியின் பிரச்சினையை அறியும் வாய்ப்பு அதிகமாகிறது.


Safe Mode இல் Boot செய்வதில், Windows 8 தனி வழியைக் கொண்டுள்ளது. முன்னைய இயங்குதளங்களைப் போல் இதில் எளிதில் Safe Mode இற்குச் செல்ல இயலாது. Windows 8 ஆனது, தான் நிறுவப்பட்டுள்ள கணினி இயங்கத் தொடங்குகையில் அதனைக் கண்காணிக்கிறது. அதன் பின்னர் பிரச்சினைகளைக் கண்டறிந்தால், அது தானாகவே உங்களை Recovery Mode இற்கு அழைத்துச் செல்கிறது.

அப்போது உங்களுக்கு 'Recovery. It looks like Windows didn't load correctly' என்ற எச்சரிக்கைச் செய்தி காட்டப்படும். இங்கு தோன்றும் திரையில் advanced repair options என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Troubleshoot> Advanced options> 'Windows Startup Settings'>Restart என ஒவ்வொன்றாகச் செல்லவும். அடுத்து உங்களுடைய கணினி 'Advanced Boot Options' என்னும் திரைக்குச் செல்லும். இதில் நீங்கள் Safe Mode ஐத் தேர்ந்தெடுக்கலாம்.








நீங்கள் Windows 8 இயங்குதளமுள்ள கணினியை நீங்களும் Safe Mode இல் இயக்க முடியும். அதற்காக, முதலில் தேடல் கட்டம் (Search) சென்று, அதில் System Configuration எனக் கொடுக்கவும். இதில் Boot என்ற Tab இனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு Safe boot என்ற Tab இல் சென்றால், பலவகையான Safe Mode Booting இற்கான தெரிவுகள் கிடைக்கும். இதிலிருந்து நீங்கள் தேவையான தெரிவை மேற்கொள்ளலாம்.

இன்னொரு மிக எளிய விரைவான வழியும் உள்ளது. அதாவது, நீங்கள் Windows 8 இயங்குதளத்தின் Log in Screen இல் இருந்தால், Restart ஐத் தேர்ந்தெடுக்கவும். கணினி Restart செய்திடத் தொடங்குகையில், Shift Key யை அழுத்தியவாறு இருக்கவும். அப்போது பிரச்சினையைக் கண்டறியும் Troubleshoot பக்கம் வரும். இதில் Safe Mode இற்குச் செல்லும் தெரிவு உங்களுக்குக் கிடைக்கும். அதனைக் க்ளிக் செய்து Safe Mode இற்குச் செல்லலாம்.


Safe Mode இற்குச் சென்ற பின்னர், முன்னைய Windows இயங்குதளங்களில் மேற்கொண்டது போலவே, எங்கு பிரச்சினை உள்ளது என்பதைத் தேடிக் கண்டறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உருக்களின் எண்ணிக்கையை எழுதுக.

மேலுள்ள படத்தைப் பார்த்து கீழுள்ள படத்தை முழுமைப்படுத்துக.




## தளிர்கரம்



இங்குள்ள பொருட்களைக் கணக்கிட்டுத் தருக.

பொருத்தமாக வெட்டி ஒட்டுக.



# கூட்டத்தொடர்பும் பேச்சாளர் நுட்பமுறைகளும்



கூட்டு என்ற எண்ணக் கருவில் குழு அல்லது கும்பல் உள்ளடங்குகின்றது. பொதுநோக்கை அடைவதற்கான ஒரு பிணைப்பு அல்லது இடைவினைத் தொடர்பு கூட்ட அங்கத்தவரிடையே காணப்படுகின்றது. குழு அங்கத்தவரை வழிநடத்துபவராகவும் அறிவித்தல்-அறிவுறுத்தல்களை வழங்குபவராகவும் பேச்சாளர் காணப்படுகின்றார். கூட்டத்திற்கும் பேச்சாளருக்கும் இடையில் பிணைப்பை உருவாக்குவதற்குக் கவர்ச்சிகரமான பேச்சு அல்லது உரையாடல் தொடர்பு நிலைமைகள் உருவாக்கப்படல் வேண்டும்.



கூட்டம் ஒன்றில் சிறந்த பேச்சாளராக உருவாவதற்குப் பேச்சு நிலைப்பட்ட தேர்ச்சிகளும் திறன்களும் நுட்பங்களும் அவசியமாகின்றன. குழு அங்கத்தவரை அதாவது, சபையைக் கவர்தல் என்பது பேச்சாளரின் தனிப்பட்ட ஆளுமைப் பண்புகளின் வெளிப்பாடுகளுடன் தொடர்புபட்டதாக அமைகின்றது. பொதுவாகக் குழுத் தொடர்பின்போது, பேசுபவரின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்ட முடியும்.

- கருத்தை அல்லது எண்ணத்தை வலியுறுத்த அல்லது வெளிப்படுத்தப் பேசுதல்
- தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்காகப் பேசுதல்.
- ஆக்கத்திறன் விருத்திக்காகப் பேசுதல்.
- பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுதல்.
- இரசனைக்காகப் பேசுதல்.

இவ்வாறான சந்தர்ப்பங்களுக்காகப் பேசுகின்ற செயற்பாட்டை முன்னெடுக்கின்றபோது வினைத்திறனானதும் வினைத்திறன்மிக்கதுமான சூழ்நிலைகள் சபையில் உருவாவதற்குப் பின்வரும்

**ஊடக பாடநெறி 50**

நுட்ப முறைகளைப் பொருத்தமாகப் பயன்படுத்த முடியும்.

- கலங்கரை விளக்க நுட்பமுறை (Light house Technigue)
- விழிவழித் தொடர்பு (Eye Contract)
- உடல் மொழி (body language)
- தோற்ற அசைவுகளின் வெளிப்பாடுகள் (புறத்தோற்றம்)
- குரல் அல்லது தொனிப் பயன்பாடுகள்
- நகைச்சுவை உணர்வு
- வினாக் கேட்டல்
- கலந்துரையாடல்
- இருவழித்தொடர்பு
- கையசைவு, தோள்குலுக்கல், தலையசைவு
- மொழித்திறன்
- உபகரணப் பயன்பாடுகள்
- ஊக்குவிப்பு நுட்பங்கள்
- முகபாவம்

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அப்பா, அம்மா, மகன் ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

පුතා: **තාත්තේ! අපට අද ඉඳලා නිවාඩු.**
தாத்தே! அபட்ட அத இந்தலா நிவாடு.
மகன்: **அப்பா! எங்களுக்கு இன்றிலிருந்து விடுமுறை.**

තාත්තා: **කවද වෙනකම් නිවාඩුද?**
கவத வெனகம் நிவாடுத?
அப்பா: **எப்போது வரை விடுமுறை?**

පුතා: **ලබන මාසේ 5 වෙනිදා වෙනකම් නිවාඩු.**
**අපි නිවාඩු කාලේ කොහේ හරි යමුද?**
லபன மாசே 5 வெனிதா வெனகம் நிவாடு.
அப்பி நிவாடு காலே கொஹே ஹரி யமுத?
மகன்: **அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விடுமுறை.**
**நாங்கள் விடுமுறை நாட்களில் எங்கேயாவது போவோமா?**

තාත්තා: **අද අම්මා පාසලට ගියා නේද? මොනවද ගුරුතුමිය කිව්වේ?**
அத அம்மா பாசலட்ட கியா நேத? மொனவத குருதுமிய கிவ்வே?
அப்பா: **இன்று அம்மா பாடசாலைக்குப் போனார்தானே?**
**ஆசிரியை என்ன சொன்னார்?**

අම්මා: **පුතා හොඳට විභාගේ ලියලා තිබුණා.**
**පුතා දක්ෂයි කියලා කිව්වා. මෙන්න රිපෝට් එක.**
புதா ஹொந்தட்ட விபாகே லியலா திபுணா.
புதா தக்ஷய் கியலா கிவ்வா. மென்ன ரிபோர்ட் எக.
அம்மா: **மகன் நன்றாகப் பரீட்சை எழுதி இருந்தார்.**
**மகன் கெட்டிக்காரன் என்று சொன்னார். இதோ ரிப்போர்ட்.**

තාත්තා: **ආ.. හොඳට ලකුණු අරගෙන තියෙනවා.**
**ඒත් සිංහලවලට ලකුණු අඩුයි නේද?**
ஆ... ஹொந்தட்ட லகுணு அறகென தியெனவா.
ஏத் சிங்ஹலவலட்ட லகுணு அடுய் நேத?
அப்பா: **ஆ... நல்ல புள்ளிகள் எடுத்திருக்கிறார்.**
**சிங்களத்திற்குப் புள்ளிகள் குறைவுதானே?**

අම්මා: **ඔව්, නිවාඩු කාලේදී ලතාගෙන් සිංහල අහගන්න කිව්වා.**
ஓவ், நிவாடு காலெதி லதாகென் சிங்ஹல அஹகன்ன கிவ்வா.
அம்மா: **ஆம், விடுமுறை நாட்களில் லதாவிடம் சிங்களம் கேட்டுக்கொள்ளச் சொன்னேன்.**

පුතා: **තාත්තේ! ලබන සතියේ දවස් 4ක් නිවාඩු තියෙනවා.**
தாத்தே! லபன சதியே தவஸ் 4 க் நிவாடு தியெனவா.
மகன்: **அப்பா அடுத்த வாரம் 4 நாட்கள் விடுமுறை இருக்கிறது.**

**අපි කොහේ හරි යමුද?**
அப்பி கொஹே ஹரி யமுத?
**நாங்கள் எங்கேயாவது போவோமா?**

තාත්තා: **පුතාට කොහේද යන්න කැමති?**
புதாட்ட கொஹேத யன்ன கெமதி?
அப்பா: **மகனுக்கு எங்கே போக விருப்பம்?**

පුතා: **අනුරාධපුරේ යමුද තාත්තේ?**
அநுராதபுரே யமுத தாத்தே?
மகன்: **அநுராதபுரத்திற்குப் போவோமா அப்பா?**

තාත්තා: **හා යමුකෝ.**
ஹா யமுகோ.
அப்பா: **சரி போவோமே.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. இன்றிலிருந்து விடுமுறை.
..............................................................

ii. ஆசிரியை என்ன சொன்னார்?
..............................................................

iii. நல்ல புள்ளிகள் எடுத்திருக்கிறார்.
..............................................................




**Did** எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை (Past Tense Auxiliary Verb) உதவிபுரியும் வினைச்சொல்லாகக் (Helping Verb) கையாண்டு, இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை, 'எதிர்மறை' வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறைபற்றி மேலும் உதாரணங்களுடன் இங்கே பயில்வோம்.

(அ) நீ அறையில் இருந்து பொதியை எடுத்தாய்.
You took the parcel from the room.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) நீ அறையில் இருந்து பொதியை எடுக்கவில்லை.
You did not take the parcel from the room.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** took- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
take- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

| | |
|---|---|
| ✱ You took. (Affirmative)<br>நீ எடுத்தாய். (உடன்பாடு) | ✱ You did not take. (Negative)<br>நீ எடுக்கவில்லை. (எதிர்மறை) |

(இ) நீ நேற்று எனது வீட்டுக்கு வந்தாய்.
You came to my house yesterday.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) நீ நேற்று எனது வீட்டுக்கு வரவில்லை.
You did not come to my house yesterday.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** came- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
come- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

| | |
|---|---|
| ✱ You came. (Affirmative)<br>நீ வந்தாய். (உடன்பாடு) | ✱ You did not come. (Negative)<br>நீ வரவில்லை. (எதிர்மறை) |

(உ) அவர்கள் புதிய எல்பத்தைப் பார்த்தனர்.
They saw the new album.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) அவர்கள் புதிய எல்பத்தைப் பார்க்கவில்லை.
They did not see the new album.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** saw- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
see- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

| | |
|---|---|
| ✱ They saw. (Affirmative)<br>அவர்கள் பார்த்தனர். (உடன்பாடு) | ✱ They did not see. (Negative)<br>அவர்கள் பார்க்கவில்லை. (எதிர்மறை) |

(எ) அவன் தனது பகலுணவை உண்டான்.
He ate his lunch.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) அவன் தனது பகலுணவை உண்ணவில்லை.
He did not eat his lunch.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** ate- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
eat- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

| | |
|---|---|
| ✱ He ate. (Affirmative)<br>அவன் சாப்பிட்டான். (உடன்பாடு) | ✱ He did not eat. (Negative)<br>அவன் சாப்பிடவில்லை. (எதிர்மறை) |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃபிரான்சிஸ் பெகொன்



பிறப்பு - 1561 ஜனவரி 22 (இங்கிலாந்தின் லண்டன் நகரின் ஸ்ட்ரென்ட் எனுமிடத்தில்)
இறப்பு - 1626 ஏப்ரல் 9 (வயது 65) லண்டன் ஹைகேட்டில்
தேசியம் - ஆங்கிலம்
காலம் - ஆங்கில எழுச்சிக் காலம்
சிறப்பு - ஆங்கில தத்துவ ஞானி, அரச ஊழியர், விஞ்ஞானி, சட்ட நிபுணர், சட்டமா அதிபர், போதனையாளர், எழுத்தாளர்

## ஆரம்ப காலம்

சிறுவயதிலேயே நோய்வாய்ப்பட்ட பெகொனின் இளம்பராயம் மிகவும் துன்பமாகவே கழிந்தது. இதனால், அவர் தனது ஆரம்பகாலக் கல்வியை வீட்டிலேயே கற்றுக்கொண்டார். சிறுவனான பெகொனின் ஆசிரியராக ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான ஜோன் வெல்சல் பெகொன்மீது தீவிர அக்கறை காட்டிக் கல்வி கற்பித்தார்.

ஃபிரான்சிஸ் பெகொன் தனது 12 ஆவது வயதில் இங்கிலாந்தின் கேம்ப்ரிட்ஜில் அமைந்துள்ள ட்ரினிட்டி பல்கலைக்கழகத்தில் இணைந்துகொண்டார். அங்கு அவர் பெரும்பாலும் லத்தீன் மொழியிலேயே கல்வி கற்றார்.

1576 இல் சட்டத்துறை பற்றிய கல்வியைக் கற்பதற்கான பிரதான நான்கு இடங்களில் ஒன்றான 'க்ரேஸ் இன்' இல் சட்டம் படிக்க அவர் இணைந்துகொண்டார். 1582 இல் பெகொன் தனது சட்டமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். ஃபிரான்சிஸ் பெகொன் தனது வாழ்வில் அடைய வேண்டிய மூன்று இலக்குகளை வகுத்து வைத்திருந்தார். அவையாவன;

- உண்மையை அறிந்துகொள்தல்
- நாட்டிற்குச் சேவை செய்தல்
- தேவாலயத்திற்குச் சேவை செய்தல்

இந்த இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள அவருக்கு அதிகாரங்களுடனான பதவி ஒன்று தேவைப்பட்டது. இதனால், நீதிமன்றப் பதவி ஒன்றுக்காக விண்ணப்பித்தார். எனினும், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அதன்பின்னர், உயர்நீதிமன்றச் சட்டத்தரணியாக அவருக்கு நியமனம் கிடைத்தது.

1584 இல் தேர்தலில் வெற்றிபெற்று, நாடாளுமன்ற உறுப்பினரான பெகொன் அங்கு 36 வருடங்கள் உறுப்பினராகக் கடமையாற்றினார். லிபரல் சீர்த்திருத்தவாதியாக அவர் பிரபல்யம் பெற்றார். 1603 இல் நைட் பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். 1607 இல் சொலிசிட்டர் ஜெனரல் பதவியும், 1613 இல் சட்டமா அதிபர் பதவியும், 1618 இல் Lord Chancellor பதவியும் அவருக்குக் கிடைத்தது.



## இலக்கிய வாழ்வு

ஆங்கில இலக்கியங்களின் வளர்ச்சிக்குப் பெகொனின் பங்களிப்பு அளப்பரியதாக இருந்தது. அவரது கட்டுரைகள் அவரது புகழுக்குக் காரணமாக அமைந்தன. மேலும், மருத்துவ விஞ்ஞானத்திற்கு உதவும் மிகவும் முக்கியமான மருந்துகள் பற்றிக் கூறும் 'வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான வரலாறு' என்ற நீண்ட நூலையும் பெகொன் எழுதினார்.

## உலகுக்கு வழங்கிய கொடைகள்

பிரித்தானிய கொலனிகள் உருவாக்கத்திலும் ஃபிரான்சிஸ் பெகொனுக்குப் பெரும் பங்குண்டு. வேர்ஜினியா, கெரோலினா, நியூபவுண்ட்லண்ட் மற்றும் கிழக்குக் கெனடா ஆகிய பகுதிகளில் கொலனிகளை அமைப்பதில் அவர் பெரும் பங்காற்றினார்.

பிராந்தியங்களை ஸ்தாபித்தல் தொடர்பில் பெகொனின் பங்களிப் புகளுக்காக அவரைக் கௌரவிக்கும் நோக்கத்துடன் 1910 இல் நியூபவுண்ட்லாந்தில் பெகொனின் உருவம் அடங்கிய முத்திரை வெளியிடப்பட்டது. 'பிராந்தியங்களை நிறுவ வழிகாட்டிய நட்சத்திரம்' என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




ஃபிரான்சிஸ் பெகொன் குறித்து ஐக்கிய அமெரிக்காவின் மூன்றாவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவரும், 'டெக்லரேஷன் ஒஃப் இன்டிபென்டன்ஸ்' என்ற நூலின் ஆசிரியருமான தோமஸ் ஜெஃப்பர்சன் இவ்வாறு கூறுகின்றார்.

"பெகொன், லொக் மற்றும் நியூட்டன் ஆகியோர் இந்தப் பூமியில் வாழ்ந்த, சிறப்பு வாய்ந்த மனிதர்களாவர். இம்மூவரும் விஞ்ஞானத்தின் பௌதீக மற்றும் ஒழுக்க ரீதியிலான அணுகுமுறைகளை முன்னேறுவதற்கான அடித்தளத்தினை இட்டனர்"

அமெரிக்காவைக் கண்டுபிடித்த நபர்கள் பட்டியலில் ஃபிரான்சிஸ் பெகொனின் பெயரையும் உள்ளடக்க வேண்டும் என்று வரலாற்றறிஞர் வில்லியம் ஹெப்வர்த் டிக்சன் குறிப்பிட்டுள்ளார்.

## மரணம்

1626 ஏப்ரல் 9 ஆம் திகதி நியூமோனியாவினால் கடும் சுகவீனமடைந்த பெகொன் மரணத்தைத் தழுவினார். அவர் வாழ்ந்த காலம்வரை சேகரித்த அறிவை உலகுக்கு அளித்துவிட்டு அவர் இயற்கையைத் தழுவிக்கொண்டார். பெகொனின் நூல்களும் கருத்துக்களும் அவரது மரணத்தின் பின்னரே பிரபல்யம் பெற்றன.

## பெகொனின் கருத்துக்கள் சில....

- எதுவும் கூற இல்லாதபோதுதான் முட்டாள்கள் பேச ஆரம்பிக்கின்றனர்.
- ஐயம் அதிகரிக்கும்போதுதான் ஞானம் ஆழமடைகின்றது.
- நான் கற்பதற்காக வாழ்கிறேன் வாழ்வதற்காகக் கற்கவில்லை.
- முயற்சித்தும் வெற்றி கிடைக்காத ஒன்றை, முயற்சியின்றி இழந்த ஒன்றுடன் எப்பொழுதுமே ஒப்பிட முடியாது.
- அதிகம் கேள்வி கேட்பவன்தான் அதிகம் கற்றுக்கொள்கிறான்.
- 'வாசிப்பு' ஒரு மனிதனை முழுமைப்படுத்தும். பேச்சு எதற்கும் தயாரான மனிதனையும், எழுத்தாற்றல் பரிபூரணமான மனிதனையும் உருவாக்கும்.
- எமது ஆற்றல்கள் சிறிய பிஞ்சுத் தாவரங்கள் போன்றன. கற்றல் அந்தத் தாவரங்களுக்கான உரமாக அமைகின்றது.
- கற்றல் மூலமே மனிதன் ஒழுக்கமடைகின்றான்.
- துன்பங்களும் வேதனைகளும் எமது ஆசான்கள்.
- ஆயிரம் சாட்சிகளைவிட மனசாட்சியே மதிப்பிற்குரியது.
- என்றுமே வாழ நினைப்பவர்கள் வாழ்நாள் முழுவதும் நோயாளிகளாகவே இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரகசியம்




முல்லாவின் புகழ் நாளுக்கு நாள் பெருகிவந்த காலகட்டம் அது. முல்லாவின் புகழ் மக்களிடையே அதிகரித்ததும் மன்னர் செவியிலும் முல்லாவின் புகழ்பற்றிய செய்தி விழுந்தது. உடனே மன்னர் முல்லாவை அழைத்து அவருக்குரிய பரிசில்களை வழங்கி அரண்மனையில் உயரிய பதவி ஒன்றையும் கொடுத்தார்.

ஒருநாள் முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவிடம் வந்து ''முல்லா உம்மை எல்லோரும் அறிஞர், தத்துவஞானி என்று கூறுகிறார்கள். அரசரும் உமக்கு உயரிய பதவி ஒன்றையும் வழங்கியுள்ளார். உமது உயர்வின் ரகசியம் என்ன என்று என்னிடம் கூறுவீர்களா?'' என்று கேட்டார். ''உம்மிடம் சொல்வதற்கு எந்தத் தடையுமில்லை. ஆனால், நீங்கள் இந்த ரகசியத்தை ஊர் முழுவதும் பரப்பிவிடுவீர்களே'' என்றார் முல்லா. ''சத்தியமாகக் கூறமாட்டேன்'' என்றார் முல்லாவின் நண்பர். ''எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள் யாரிடமாவது நான் சொன்னதைக்கூறிவிட்டால் நான் என்ன செய்வது'' என்று திரும்பவும் கேட்டார் முல்லா.

''கோடிபொன் கொட்டிக் கொடுத்தாலும் அந்த ரகசியத்தைக் கூறமாட்டேன். ரகசியத்தை உளறுபவர்கள் மூடர்கள் என நான் கேள்விப்பட்டுள்ளேன்'' என்றார் நண்பர்.

''நண்பரே! நானும் உங்களைப் போலத்தான் ரகசியத்தைக் காப்பாற்றுவதில் நீங்கள் எவ்வளவு கவனமாக இருக்கிறீர்களோ, அதேபோல்தான் நானும் கோடி பொன் கொட்டிக்கொடுத்தாலும் என்னிடம் உள்ள ரகசியத்தைக் கண்டிப்பாக வேறு ஒருவருக்கும் கூறமாட்டேன்'' என்றார் முல்லா.

வ.செந்தாளன்,
யாழ்ப்பாணம் இந்.கல்., சாவகச்சேரி.



# பூந்தோட்டம்

அழகின் இருப்பிடம் எதுவம்மா?
அன்பு அன்னையை நான் கேட்டேன்
பழகு தமிழில் அவர் சொன்னார்
பூந்தோட்டம் தானென்று!

சிவப்பு வெள்ளை ரோஜாவும்
செம்பருத்தி மல்லிகையும்
குவளைமலரும் குங்குமமும்
காண்பவர் மனதைக் கவர்ந்திடுமே!

ரயிலில் ஏறி உறவினர்கள்
பயணம் புறப்படும் வேளையிலே
கரத்தால் விடை கொடுப்பது போல்
கழுத்தசைக்கும் பூமரங்கள்!

எம்.எஃப்.ரிஸ்மா,
அலவியா மு.ம.வித்., எலுவிலை.

## தென் அமெரிக்காவின் அசுர வேட்டைக்காரன்

# சேபர் டூத் பூனை

'சேபர் டூத்' பூனை (Smilodon) வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ஓர் உயிரினமாக உள்ளது. இது பெரியவகைப் பூனையினத்தைச் சேர்ந்த ஒரு பிராணியாகும். இவை பூனைக்குடும்பத்தில் 3 துணைக் குடும்பத்தையும் பைப் பாலூட்டிகளில் 2 குடும்பத்தையும்



கொண்டுள்ளன. இந்த இனத்தில் Saiblrlan giant smilondon என்ற பூனையே மிகப்பெரிய பூனையாக இனங்காணப்பட்டுள்ளது. இவற்றின் மேல்தாடையில் (Maxilla) உள்ள கோரைப்பற்கள் இரண்டு (Canine) வேட்டையாடுவதற்கு முக்கியமாகக் காணப்படுகிறன. இவற்றின் முன்னங்கால்கள் குட்டையாகவும் பின்னங் கால்கள் நீளமாகவும் உள்ளன. இன்றுவரை கொடுவாள்பூனை இனத்தில் மொத்தம் 7 இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவை சுமார் 42 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் அதிகமாகப் பெருகிக் காணப்பட்டாலும் கி.மு. 10000 ஆண்டளவில் பல உயிரினங்கள் அழிந்த காலகட்டத்தில் இந்தவகை கொடுவாள் பூனை இனமும் அழிவடைந்துள்ளன. எவ்வாறு இவை அழிந்தன என்பது மிக மர்மமாகவே உள்ளது. மனிதர்களால் இவை அழிந்திருக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கவில்லை. ஏனெனில், வரலாற்றுக்கு முந்திய காலக் குகை மனிதனின் கொடுங்கனவாகவே இவை இருந்துள்ளன என்பதை அவனுடைய குகை ஓவியங்களை வைத்தே ஊகிக்க முடிகிறது. பனியுகத்தின் (Iceage) முடிவினால் ஏற்பட்ட கால நிலை மாற் றங்கள் இந்த அரியவகை விலங்கினத்தின் அழிவைத் தூண்டியிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## தகவல் பெட்டி

- ஒலிவ் மரம் ஒன்று 1,500 வருடங்கள் வரை உயிர்வாழக்கூடியது.
- பூனைகள் தமது எண்ணங்களை வெளிப்படுத்த நாய்களைவிட, வித விதமான சத்தங்களை எழுப்புகின்றன.
- தற்போது 4000 தாதுக்கள் வரை கண்டுபிடிக்கப்பட்டு இருந்தாலும் சுமார் 200 தாதுக்கள் மட்டுமே முக்கிய பயன்பாட்டில் உள்ளன.
- ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு டிரில்லியன் தொன் நீரை ஆவியாக்குகிறது சூரியன்.
- பண்டைய சீனாவில், நோயாளிகள் குணமடைந்தால் மட்டுமே மருத்துவர்கள் பணம் வாங்கிக்கொள்வர்கள்.

ச.பிரஷாந்தன், கொழும்பு ரோயல் கல்லூரி,
கொழும்பு-07

# உதைபந்தாட்டம்




- உலகின் மிகப் பிரபலமான விளையாட்டு - உதைபந்தாட்டம்
- உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தால் (FIFA) நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்பட்டு வருகின்றது.
- முதலாவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் உருகுவே அணி செம்பியனானது.
- சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும் கால அளவு - 90 நிமிடங்கள்.
- உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் அதிக தடவைகள் கிண்ணத்தை வென்ற நாடு பிரேஸில்.

நூறுல் இஷா இல்யாஸ், கஹு/அல்ஹம்றா ம.வித்., தர்கா நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.50



### மேலிருந்து கீழ்

01. ஆறாம் வேற்றுமை உருபொன்று.
02. 'இனம்' என்றும் பொருள்படும்.
03. கப்பம்.
05. நாங்கள். (தலைகீழ்)
06. ஆழமான பள்ளம்.
07. இறைவன்.
08. சிறிய நீர்நிலை.
09. 'அழு' என்பதன் எதிர்க்கருத்து.

### இடமிருந்து வலம்

01. 'இயலாதது' என்பதைக் குறிக்கும்.
04. வழிபடு/வணங்கு என்றும் அர்த்தப்படும்.
08. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று.
10. 'பிழை' என்பதன் எதிர்க்கருத்து.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.49 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வா | ன | 2 வீ | ல் | | 3 அ |
| டா | | 4 மோ | த | க | ம் |
| ம | | 5 ச | 6 கா | | பு |
| ல் | | ன | | 7 எ | லி |
| லி | | ம் | 8 ஆ | | |
| 9 கை | தி | | டு | ட் | 10 பொ |

## ஒத்தகருத்துச் சொல் தருக — 4

1. ஏர் - ..............................
2. தெரு - ..............................
3. கோரிக்கை - ..............................
4. கடமை - ..............................




தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.09.18 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 434
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## பொருத்தமான நிழற்படத்துடன் இணைக்க — 1




## பின்வருவனவற்றை இறந்தகாலத்தில் எழுதுக — 5


1. பாலா பாடசாலைக்குப் போகின்றான்.
..............................
2. கண்ணனின் வீட்டிற்கு விருந்தினர் வருகின்றனர்.
..............................
3. ஊர்மக்கள் திருடனைக் கையும் களவுமாகப் பிடிக்கப் போகின்றனர்.
..............................
4. நவீன தொழில்நுட்ப முறையில் ஆய்வுகளை நடத்துகின்றனர்.
..............................

## அறிவுக்கு விருந்து - 431 விடைகள்


**போட்டி: 01**



**போட்டி: 02**




**போட்டி: 03**





**போட்டி: 04**

1. புண்ணியம்
2. குளறுபடி
3. மலர்ச்சி
4. இலையான்
5. தீர்ப்பு


**போட்டி: 05**

1. இடைச்சி
2. பேரன்
3. சித்தி
4. தேவி
5. குமரன்

## வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 2



## உருக்களின் எண்ணிக்கையில் வட்டமிடுக — 3




## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 431 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.ஸுர்பா, அக்கரைப்பற்று-04.

**போட்டி: 02**
என்.அர்ச்சனா, ஹல்கரனோயா.

**போட்டி: 03**
அனாஸ் அஹமட், திக்குவலை.

**போட்டி: 04**
ஜெ.கிதுர்சிகன், திருகோணமலை.

**போட்டி: 05**
எஃப்.சித்தீகா, அலபடகம.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எஃப்.ரம்லா, பாணந்துறை.
- எஃப்.ருகையா, மஸ்கெலியா.
- ஆர்.பாரதகாந்தன், மட்டக்குளிய.
- எச்.ஹம்தா, நிந்தவூர்-02.
- கே.சஸ்மிதா, திருகோணமலை.
- ஆர்.விக்னேஸ்வரன், தெஹிவளை.
- எஃப்.முபஸ்ஸரா, உக்குவளை.
- எம்.மலீஹா, நாவலப்பிட்டி.
- எஸ்.விமலேசன், பருத்தித்துறை.
- எஃப்.ரமீஸா, மாத்தளை.

noolaham.org | aavanaham.org






வலப்பனை, மஹாஊவாவைச் சேர்ந்த ஜேசுதாஸன்-மேரிசுசிலா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜெராட் சாள்ஸ், தனது பன்னிரெண்டாவது பிறந்ததினத்தை 16.09.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் புனித வனத்துச் சின்னப்பரின் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் வாழகவென வாழ்த்துகின்றனர்.



மாத்தறை மீயல்லையைச் சேர்ந்த அன்ஸார்-அமீனா தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்ஸார் அஹமட், தனது முதலாவது பிறந்ததினத்தை 09.09.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கொழும்பு-10 ஐச் சேர்ந்த இலங்கோ-எக்னஸ் தம்பதியரின் செல்வப் புதல்வி றொமென் பெசில்டா, தனது பத்தாவது பிறந்தநாளை 07.09.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பிகள் அனைவரும் மாதாவின் கிருபையால் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: ரோஸ்லின்)*



யாழ்ப்பாணம் தாவடியைச் சேர்ந்த கணேசலிங்கம்-பாலஜோதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் ஜீவகான், தனது பதினான்காவது பிறந்தநாளை 31.08.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பிள்ளையாரின் அருள்பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: க.டேசிகா)*



கிண்ணியா-03 அண்ணல் வீதியைச் சேர்ந்த மர்சுக் கிபாஸ்-ஹஸ்புல்லா றம்ஸியா தம்பதியரின் செல்வப் புதல்வன் கிபாஸ் முஹம்மட் றிஸ்னி, தனது முதலாவது பிறந்தநாளை 18.07.2013 அன்று சிறப்பாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் வழமுடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: மு.றுஸ்மில்)*

ஹரீமலுவ-ரம்புக்கணையைச் சேர்ந்த இபாம்-பஸ்ரினா தம்பதியரின் செல்வப் புதல்வி ஐனா, தனது முதலாவது பிறந்தநாளை 29.08.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் கிருபையால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: பஸ்ரினா)*

பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த தேவராசா-சகுந்தலாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வி கோபினங்கா, தனது பதினான்காவது பிறந்தநாளை 25.08.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: நிறோஜினி)*





அனுப்ப வேண்டிய முகவரி:
**கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு**



எஃப்.சுஹைறனா,
பதுரியா ம.கல்., மாவனல்லை.



எல்.பாத்திமா ஸஹானா ஸுஃபா,
ஆயிஷா பாலிகா ம.வித்.,
அக்கரைப்பற்று.



என்.ஞஹா,
பண்டாரகொஸ்வத்த மு.ம.வித்.,



தெ.சுபானுஜன்,
களுதாவளை ம.வித்., களுதாவளை.



ஆ.ஜெரோன் டபரேரா,
நானாட்டான் ம.வித்.,
மன்னார்.



ஆர்.ஜெஸீமா,
தெஹிதெனிய மு.ம.வித்.,
தெஹிதெனிய.



எம்.லுக்மான்,
அஸ்ஹர் ம.கல்., அக்குறனை.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...




ஹென்றி மெட்டிஸ்

ஹென்றி மெட்டிஸ், *1869* ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் *31* ஆம் திகதி வட பிரான்ஸின் 'லே கட்டேயு கெம்ப்ரேசிஸ்' எனும் பகுதியில் பிறந்தார். *1887* இல் பெரிஸ் சென்று சட்டம் கற்று, நீதிமன்ற நிர்வாகியாகப் பணியாற்றினார். *1889* ஆம் ஆண்டிலேயே, இவர் முதன்முதலில் ஓவியம் வரையத் தொடங்கினார். அதன் பின்னர்தான், ஓர் ஓவியராக வர வேண்டும் என்ற எண்ணம் அவருள் தோன்றியது. இதனை அடுத்து, *1891* ஆம் ஆண்டு பெரிஸிலுள்ள எக்கடமி ஜூலியனில் இணைந்து ஓவியம் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அதன்படி, அசையா நிழற்படங்கள் மற்றும் இயற்கைக் காட்சிகளை பாரம்பரிய முறைப்படி வரைந்து புகழ்பெற்றார்.



சிவப்பு அறை

முற்கால ஓவியர்களின் படைப்புகளாலும் நவீன கால ஓவியர்களாலும் பெரிதும் கவரப்பட்ட ஹென்றி மெட்டிஸ், வரைவாளராகவும் அச்சு ஓவியராகவும் சிற்பியாகவும் முதன்மையான ஓவியராகவும் பிரசித்திபெற்றார். பளீர் நிறங்கள்கொண்டு ஓவியங்கள் வரையப்பட்ட பளீர்நிறமியப் பாணியை அறிமுகப்படுத்தியவரும் இவரே. தவிர, நவீனத்துவ வாதம், உணர்வுப் பதிவுவாதம் போன்ற ஓவியங்களுக்கும் பெயர் பெற்றிருந்த இவர், *1954* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி பிரான்ஸின் 'நிஸா' எனும் நகரில் உயிர் நீத்தார்.



ஆற்றங்கரை




தொப்பி அணிந்த பெண்

தொப்பி அணிந்த பெண், ஆற்றங்கரை, வாசிக்கும் பெண், சிவப்பு அறை, லக்ஸம்பர்க் தோட்டம், திறந்த ஜன்னல், தட்டுகளும் பழங்களும், இளம் மாலுமி போன்ற ஓவியங்கள் உட்பட, மேலும் பல ஓவியங்கள் இவரது திறமையை வெளிக்காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பறவைகள் உலகில் பெரியவர்கள்

*பறவைகள் உலகம் மிகவும் அற்புதமானது. தோற்றத்தில், அளவில், நிறத்தில், குண இயல்புகளில், ஒலி எழுப்புவதில் என பல அம்சங்களில் பறவை இனங்களிடையே பல்வேறு வித்தியாசங்களை நாம் காணலாம். அத்தோடு, பறவைகள் பல்வேறு சாதனைகளுக்கும் உரித்துடையன. அந்தவகையில், உலகில் வாழ்ந்த மற்றும் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்ற பெரிய பறவைகள் சிலவற்றைப் பற்றிய பல சுவையான தகவல்களை இங்கு பார்ப்போம்.*



## முற்காலத்தில் வாழ்ந்த மிகப்பெரிய பறவை

முற்காலத்தில், மிகப்பெரிய பறவை வகைகள் இரண்டு வாழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் ஒன்று-'யானைப்பறவை' என்றும் மற்றையது 'டைநோரிஸ்' என்றும் அழைக்கப்பட்டுள்ளன. சுமார் 11 அடி உயரமான யானைப்பறவை, 1100 றாத்தல் நிறையுடையதாக இருந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இப்பறவையால் பறக்க முடியாது. அத்துடன், இப்பறவை பெரும்பாலும் மடகஸ்கார் மற்றும் அதனை அண்டிய கிழக்கு ஆபிரிக்க பிரதேசங்களிலேயே வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது. யானைப்பறவையிலிருந்து தோன்றியதாகக் கருதப்படும் 'மோவா' எனும் பெயரில் அழைக்கப்பட்ட பறவை இனம், நியூஸிலாந்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் வாழ்ந்ததாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. மோவா மிகப் பெரிய பறவையினமாக இருந்து, பின்னர் படிப்படியாகப் பரிணாமம் பெற்றதாக நம்பப்படுகின்றது.



## உலகிலுள்ள மிகப்பெரிய பறவை

'தீக்கோழி' (Ostrich), எனும் பறவை இனமே, 'உலகின் மிகப் பெரிய பறவை' என்ற சாதனைக்கு உரித்துடையது. தீக்கோழி, வட ஆபிரிக்க வலயத்தில் வாழும் ஒரு பறவை இனம் ஆகும். நன்கு வளர்ச்சி அடைந்த ஆண் தீக்கோழியின் உயரம் 9 அடியாகும். அதன் நிறை 345 றாத்தலாக உள்ளது. தீக்கோழியின் மிகப்பெரிய உருவத்தின் காரணமாகவே, அதனால் பறக்க முடிவதில்லை. ஆனால், உலகிலேயே மிக வேகமாக ஓடக்கூடிய பறவை என்ற புகழை தீக்கோழி பெற்றுள்ளது. இது மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது. சண்டையிடுவதற்குப் பெரிதும் விரும்பும் தீக்கோழியானது, தனது எதிரிகளை துணிவுடன் எதிர்கொண்டு, அவற்றைத் தனது நீண்ட கால்களால் தாக்கி வெற்றிகொள்ளும். உலகிலேயே மிகப்பெரிய முட்டையிடும் பறவையினமாகவும் தீக்கோழி திகழ்கின்றது.

## வேட்டையை விரும்பும் பெரிய பறவை



வேட்டையாடும் பெரிய பறவை இனமாக அந்தீஸ் மலைப்பகுதியில் வாழும் ராஜாளி இனம் கருதப்படுகின்றது. தென் அமெரிக்காவின் அந்தீஸ் மலைப்பிரதேசங்களில் கூடுகள் அமைத்து வாழும் இப்பறவைகள், மிருகங்களை வேட்டையாடி உணவாக்கிக்கொள்ளப் பெரிதும் விரும்புகின்றன. இப்பறவை இனத்தில் நன்கு வளர்ச்சி அடைந்த ஆண்பறவையொன்று 20 முதல் 27 றாத்தல் வரையிலான நிறையைக் கொண்டிருக்கும். அது தனது சிறகினை விரித்தால் அதன் அகலம் சுமார் 10 அடியாக இருக்கும். அந்தீஸ் ராஜாளிகள் சுமார் ஐம்பது வருடங்கள் வரை உயிர்வாழக்கூடியவை!

## நீண்ட சிறகுகளைக் கொண்ட பறவை



உலகிலேயே மிக நீளமான சிறகுகளைக் கொண்ட பறவையினமாக 'வெண்டரன் எல்பட்ரோஸ்' எனும் பறவை இனம் திகழ்கின்றது. நன்கு வளர்ச்சி அடைந்த இந்த எல்பட்ரோஸ் பறவை ஒன்றின் சிறகுகளின் நீளம் சுமார் 11 அடியாகும். இப்பறவைக்கு இருக்கின்ற நீளமான சிறகுகள் காரணமாக, வானில் மிதந்து செல்லும் திறனையும் இது பெற்றுள்ளது. இதனால், வானில் அதிக நேரம் அங்குமிங்கும் பறந்து திரியக்கூடிய ஆற்றலையும் இப்பறவை இனம் பெற்றுள்ளது.

## மிகப்பெரிய கடற்பறவை



'நோர்தர்ன் ரோயல் எல்பட்ரோஸ்' எனும் பறவை தான், இன்று உலகில் வாழும் மிகப்பெரிய கடற்பறவை இனமாகக் கருதப்படுகின்றது. இதன் உடல் வெள்ளை நிறமாகும். இப்பறவையின் பின்பக்கச் சிறகுகளில் கறுப்பு நிறத்தையும் காணலாம். நோர்தர்ன் ரோயல் எல்பட்ரோஸ் பறவை, தமது ஆயுட்காலத்தில் அதிக நேரத்தை அதாவது 80% அளவு காலத்தை கடலிலேயே செலவழிக்கின்றது. கடல்நீரின் மேற்பரப்பிற்கு வரும் மீன்களைப் பிடித்து உணவாகக் கொள்கின்றது. இப்பறவை தனது சிறகுகளை இருபுறங்களும் விரிக்கும்போது, அதன் அகலம் சுமார் மூன்று மீற்றராகும். அதேபோல் இந்த பறவையால் மணிக்கு 115 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்க முடியும். இவை 45 வருடங்கள்வரை உயிர்வாழும்.

## உலகின் மிகப்பெரிய பறவைக்கூடு



மாலி எனும் பறவை இனமே, உலகில் மிகப் பெரிய பறவைக் கூட்டை அமைக்கின்றது. அது அமைக்கும் கூட்டின் உயரம் 15 அடி ஆகும். அகலம் 35 அடியாகவும் உள்ளது.

## ராட்சத டைனோசர் பறவை



ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் வாழ்ந்ததாகக் கருதப்படும் மிகப்பெரிய விலங்கின வகைகளில் ஒன்றாக 'டைனோசர்' கருதப்படுகின்றது. டைனோசர் இனத்தைச் சேர்ந்த பறவைகளின் தொல்பொருள் எச்சங்கள் ஆய்வுகளின்போது கண்டுபிடிக்கப் பட்டாலும், அத்தகைய ராட்சதப் பறவைகள் இருந்ததாகவோ அல்லது அவை பறந்ததாகவோ உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. அதற்குப் பிந்திய காலதில் வாழ்ந்த பறவைகளைப் பற்றிய தகவல்களே மக்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளன. அந்த தகவல்களின் படி, 40 முதல் 50 றாத்தல் வரை நிறையுள்ள டெரோசோரஸ் எனும் டைனோசர் பறவையினம் உலகில் வாழ்ந்ததாகவும் அப்பறவை இனம் பறக்கும் திறனைக் கொண்டிருந்திருக்கலாம் என்றும் கருதப் படுகின்றது.

இரஞ்சித் ஜெயகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Madonna of the pinks




Sistine Madonna



Madonna and child

# ரஃபாயெல் ஓவியங்கள்



The marriage of the Virgin

உலகப் புகழ்பெற்ற ஓவியக் கலைஞரான ரஃபாயெல், மனிதர்களின் மனிதாபிமான உணர்வுகளைச் சித்தரிப்பதில் பிரபல்யம் பெற்றவராவார். இத்தாலியரான இவரை ரெஃபெல்லோ சென்ஸியோ டா அர்பினோ என்றும் அழைப்பர். தமக்கே உரிய ஒரு பிரத்தியேகப் பாணியைப் பின்பற்றி அவர் வரைந்த ஓவியங்கள் உலகை வியக்க வைத்தன என்றே கூறவேண்டும்.


*1483* இல் இத்தாலியில் உள்ள அர்பினோவில் இவர் பிறந்தார். பெருஜினோவிடம் கல்வி கற்ற ரஃபாயெல், டாவின்சியினதும் மைக்கெல் லோவினதும் நண்பராவார். வொஷிங்டனில் உள்ள Alba Madonna, அன்னை மரியாள் மற்றும் குழந்தை யேசுவினது ஓவியம், எளிய கலவை முறையில் உருவாக்கப்பட்ட Madonna and child, ஜேர்மன் அருங்காட்சியகத்தில் உள்ள Sistine Madonna, சுண்ணாம்பினால் நிறைவுசெய்யப்பட்டுள்ள மாதுளம்பழத்தைக் கையில் ஏந்திய அன்னை மரியாளின் ஓவியம் ஆகியன ரஃபாயெலின் சிறந்த படைப்புகளாகக் கருதப்படுகின்றன. அத்துடன், அவரது படைப்புகள் ஓவியக் கலைநுட்பத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியவையாகவும் காணப்படுகின்றன.

ரோமின் வத்திக்கான் தேவாலயத்தில் உள்ள 'எதென்ஸ் பாடசாலை' ஓவியம் ரஃபாயெலின் ஈடு இணையற்ற ஓவியமாகக் கருதப்படுகின்றது. இந்த ஓவியமானது, 'ஃப்ரெஸ்கோ' என்ற ஓவியநுட்பப் பாரம்பரியத்திற்குரியதாகும்.

ரஃபாயெலின் ஓவியங்கள் சமநிலை கொண்டவையாகும். Vision of a knight, La disputa, The Parnassus, Madonna of the pinks ஆகிய ஓவியங்களும் ரஃபாயெலின் சிறப்பான படைப்புகளாகும். இவை செல்வந்தர்கள் வசமே உள்ளன.



Judgment



The School of Athens

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1967

12 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1967
அமெரிக்கா

12,011
சாரணர்கள்



Farragut State
Park- Idaho

105 நாடுகள்

ஜூலை 31-
ஒகஸ்ட் 09







பன்னிரெண்டாவது உலக சாரணர் ஜம்போரி அமெரிக்க ஐக்கிய நாட்டின் IDAHO FARRAGUT STATE PARK என்ற இடத்தில் 1967 இல் நடைபெற்றது. வட அமெரிக்காவில் நடைபெற்ற இரண்டாவது ஜம்போரி இதுவாகும். இதில் 105 நாடுகளைச் சேர்ந்த 12,011 சாரணர், சாரணியர்கள் பங்கெடுத்தனர். 'நட்பிற்காக' (For Friendship) என்பது பன்னிரெண்டாவது உலக சாரணர் ஜம்போரியின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. வீரதீரச்செயல், தனித்திறன் போட்டிகள் நடாத்தப்பட்டன. 'Pend Oreilla' என்ற ஏரியில் நீர் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் நிகழ்ந்தமை சிறப்பான நிகழ்வாகும்.

# முகாம் அமைக்கையில் கொத்தமல்லி அருந்துவோம்...!

சாரணர்கள் முகாம் அமைக்கையில் களைப்பிற்கு உள்ளாவதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் களைப்பை போக்குவதற்கென பல்வேறு வகையிலான பானங்களை அருந்துவது உண்டு. இருப்பினும், கொதித்தாறிய நீரை அருந்துவதே உசிதமானது என்பதே சாரண முகாம் விதிமுறையாகும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். தொடர்ந்து இரவு நித்திரைக்கு செல்வதற்கு முன்னர் ஒரு கோப்பை கிண்ணம் கொத்தமல்லி நீரை அருந்தினால் அது மிகவும் ஆரோக்கியமானதாக இருக்கும். கொத்தமல்லியானது உடல் அசதி, களைப்பு, சோர்வு ஆகியனவற்றை நீக்கவல்ல நிவாரணியாக அமைகின்றது. இதற்கென அதிகமாக செலவு செய்யவேண்டியேற்படுவதுமில்லை. அதுமட்டுமன்றி, இதிலுள்ள இன்னொரு பயன், மறுநாள் மிகவும் உடல் சுறுசுறுப்பு மிக்க இனிய காலைப்பொழுதாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.






## போத்தலில் துடைப்பம்

கழிவுப் பொருளாக நாம் வீசியெறிகின்ற வெற்று ப்ளாஸ்டிக் போத்தலைக்கொண்டு சாரணர் முகாம்களில் துடைப்பமாக (தும்புத்தடி) பயன்படுத்த முடியும். படத்தில் காட்டப்பட்டுள்ள படிமுறைக்கேற்ப, வெற்றுப் போத்தலை துடைப்பமாக உருவாக்கிக் கொள்ளுங்கள்.



## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| ஆர்ஜென்டீனா | 42,812 | 1992 | 1912 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)



திருகோணமலை மாவட்ட திரிசாரணர்களின் சின்னம் சூட்டும் நிகழ்வு கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் சங்கத்தின் நிர்வாகத்தினரும் கலந்துகொண்டனர். தேசிய தலைமைக் காரியாலய ஆணையாளர் திரு என்.செளந்தரராஜன் LT அவர்கள் திரிசாரணர்களுக்கு சின்னம் சூட்டியமை சிறப்பம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே மிகவும் தட்டையான கைக்கடிகாரம்

உலகிலேயே மிகவும் தட்டையான கனம் குறைந்த கைக்கடிகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

'சிஎஸ்டீ-01' (CST-01) என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கைக்கடிகாரமானது, 0.8 மில்லிமீற்றர் கனத்தையே கொண்டுள்ளது. தனிப் பட்டியொன்றில் அமைக்கப்பட்டுள்ள இது வளைக்கக்கூடிய வகையில் இரும்பினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பாவிப்பவர் தனது கையின் அளவிற்கு ஏற்ப வளைத்து இறுக்கமாக்கி வளையல் போன்று அணிந்துகொள்ள முடியும்.





க்ரெடிட் கார்ட்டையும் விட மெலிதான இந்தக் கைக்கடிகாரமானது 'இலக்ட்ரோனிக் இன்க்' (இலத்திரனியல் மை) மூலமாகவே நேரத்தைக் காட்டுகின்றது. கின்டல் (Kindle) இலக்ட்ரோனிக் எனப்படும் புத்தகத்தை அமைப்பதற்கெனப் பயன்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பமே இதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதிலுள்ள இலத்திரனியல் பகுதியானது 0.5 மில்லிமீற்றர் கனதியை மட்டுமே கொண்டதாகும். தேவைக்கு ஏற்ப இதனை உருவகித்துக்கொள்ள முடியும். இதற்கான இயக்கு வலுவை தினர்ஜி மைக்ரோ செல் எனர்ஜி பெற்றரி மூலமே வழங்கப்படுகின்றது.

இதனை சார்ஜ் செய்வதற்கு பத்து நிமிடங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன. ஒரு மாதகாலத்திற்கு இந்த பெற்றரி சார்ஜ் வலு போதுமானதாக இருக்கும். இவ்வாறு இதன் பெற்றரியை 10,000 தடவைகளுக்கு சார்ஜ் செய்ய முடியும். இது இந்த கைக்கடிகாரத்தின் ஆயுள் காலமான 15 வருடங்களுக்கு போதுமானதாகும்.

டேவ் வொன்டல் (Dave Vandal) என்பவரே இந்த கைக்கடிகாரத்தை உருவாக்கியவராவார். இவர் தனது நண்பரான ஜெரி ஒலியரி என்பவருடன் இணைந்து Central-Standard Timing என்ற நிறுவனத்தை உருவாக்கியே மேற்படி புதிய கடிகாரத்தை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இதன் உற்பத்திச் செலவிற்கான நிதியை வசூல் செய்வதற்கென இவர்கள் கிக் ஸ்டாட்டர் (Kick Starter) என்ற இணையதளத்தின் அனுசரணையையும் பெற்றக்கொண்டனர். இதன்படி, இவர்கள் எதிர்பார்த்த ஒரு லட்சம் டொலர் நிதியுதவிக்கு பதிலாக 4,319,959 டொலர் நிதியுதவி ஐந்து நாட்களுக்குள் அதிகப்படியாகக் கிடைத்தது.

குறித்த CST-01 கைக்கடிகாரமானது, 'சீக்கோ எப்ஸன் சிஸ்டத்தை சார்ந்த தான சிப்' (Chip) மூலமே இயங்குவதால் இதற்கென ஏனைய கடிகாரங்களைப் போன்று திருகு கருவிகளோ, வேறு பட்டன் அழுத்திகளோ எதுவும் கிடையாது.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 11, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org